DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1469 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 31, 2024

# “தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளின் பிள்ளைகளின் உயர்கல்வியைத் தொடரும் வகையில் கட்டுப்பாடுகள் சிலவற்றை தளர்த்தி அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்குங்கள்”

## உதயன் விருது விழாவில் சிறப்பு விருந்தினராக வருகை தந்தை கனடாவிற்கான இந்திய துணைத்தூதுவரிடம் கோரிக்கை

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

”இலங்கையிலிருந்து இராணுவக் கெடுபிடிகளிலிருந்து உயிர் தப்புவதற்காக இந்தியா சென்று அங்கு தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக வாழும் எமது ஈழத்தமிழ் சொல்லொனா துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள். எனினும் அவர்கள் தங்கள் குடும்பத்தை கவன-மாகக் கவனித்து தங்கள் பிள்ளைகளுக்கும் கல்வி அறிவூட்டும் வகையில் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். இந்த பெற்றோர்களான அகதிகளின் பிள்ளைகள் அங்கு பரீட்சைசகளில் அதிக புள்ளிகளைப் பெற்றும் பல்கலைக் கழகங்கள் அல்லது கல்லூரிகளில் உயர் கல்வியைப் பெறமுடியாமல் அவர்களது அகதிகள் என்ற அந்தஸ்த்து தடுத்துவருகின்றது. மேற்படி திறமை வாய்ந்த பிள்ளைகளின் உயர்கல்வியைத் தொடரும் வகையில் பல கட்டுப்பாடுகள் உள்ளன. (தொடர்ச்சி 22ம் பக்கம்)



# கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் உதயன் சர்வதேச விருது விழா வெற்றிகரமாக இடம்பெற உதவிய வர்த்தகப் பிரமுகர்கள்

18வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் உதயன் சர்வதேச விருது விழாவில் வெளிநாடுகளிலிருந்து விருது பெறுவதற்காக கனடாவிற்கு அழைக்கப்பெற்ற மூவர் மற்றும் கனடா வாழ் வெற்றியாளர்கள் நால்வர் என எழுவர் மேடையில் தனித்தனியாகக் கௌரவிக்கப்பட்ட பின்னர் ஒன்றாக மேடையில் நின்று புகைப்படங்கள் எடுத்துக்கொண்டனர்.

மேற்படி விருது விழா சிறப்பாக நடைபெற தங்கள் ஆதரவை தொடர்ச்சியாக வழங்கிவரும் பல வர்த்தக பெருமக்களின் உதவிகள் விழாவின் பலமாக விளங்கியது. இங்கே காணப்படும் படத்தில் வர்த்தக அன்பர்களோடு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் லோகன் கணபதி மற்றும் அரிஸ் பாபிகியன் ஆகியோர் மகிழ்ச்சியுடன் நிற்பதைக் காணலாம்.




இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

கனடிய செய்திகள்
Canadian News

# கடந்த 26 அன்று ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் இடம்பெற்ற உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா

மேற்படி விழாவில் வெளிநாடுகளிலிருந்து விருது பெறுவதற்காக கனடாவிற்கு அழைக்கப்பெற்ற மூவர் மற்றும் கனடா வாழ் வெற்றியாளர்கள் நால்வர் என எழுவர் மேடையில் தனித்தனியாகக் கௌரவிக்கப்பட்ட பின்னர் ஒன்றாக மேடையில் நிற்பதையும் அவர்களை வாழ்த்தும் வகையில் கனடா ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சுக்களின் பாராளுமன்றச் செயலாளரும் மாகாண உறுப்பினருமான லோகன் கணபதி மற்றும் மார்க்கம் நகர சபையின் 7ம் வட்டார உறுப்பினர் யுனைற்றா நாதன் உட்பட அழைக்கப்பெற்ற அரசியல் தலைவர்கள் அங்கு சமூகமளித்து உதயன் பத்திரிகையின் சிறப்புக்களையும் உதயன் சர்வதேச விருது விழாவின் மேன்மை பற்றியும் உரையாற்றினார்கள்.








கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் திரு. முரளி சிவகுருவின் தலைமையுரையைத் தொடர்ந்து அரசியல் பிரமுகர்கள் மேடைக்கு அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பெற்றனர்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் பாடல்கள் வழங்கும் நிகழ்ச்சிகள் என சபையோரை மகிழ்விக்கும் நிகழ்வுகள் சேர்க்கப்பட்டிருந்தன.

இவ்வருடத்தின் விருதுகளைப் பெற தேர்ந்தெடுக்கப்பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்றது.

உதயன் "தலைமைத்துவ விருது" வழங்கப்பெற்ற சிவஸ்ரீ நா. சோமஸ்கந்தக் குருக்கள் அவர்கள். உதயன் "வர்த்தக மேம்பாட்டு விருது" வழங்கப்பெற்ற வீடு விற்பனை முகவர் ராஜ் நடராஜா அவர்கள். உதயன் "கலை இலக்கிய மேன்மை விருது" வழங்கப்பெற்ற தங்கராசா சிவபாலு அவர்கள். உதயன் "இளையோருக்கான அடையாள விருது" வழங்கப்பெற்ற செல்வி ஸ்ருதி பாலமுரளி அவர்கள். "உதயன் வாழ்நாள் சாதனையாளர் - தமிழ்நாடு விருது" வழங்கப்பெற்ற "தமிப்பணி" ஆசிரியர் வா.மு.சே. திருவள்ளுவர் அவர்கள். உதயன் "சிறப்பு விருது - ஐரோப்பா" என்னும் கௌரவ விருது வழங்கப்பெற்ற பிரான்ஸ் வாழ் ஆர்கேஎஸ். அருள்மொழித்தேவன் அவர்கள் ஆகியோர் மேடையில் மகிழ்ச்சியுடன் நிற்பதைக் காணலாம்.


















































## உதயன் கதிரோட்டம்

# சமூகத்தின் மீதான அக்கறையோடு ஊடகத்துறையில் கால் பதித்தவர்களுக்கு இரக்கமின்றி 'இறப்பை' பரிசளித்த பாதகர்கள்

உலகில் பல நாடுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகளும் அவர்களால் நியமனங்கள் செய்யப்பெறும் இராணுவ மற்றும் காவல்துறையினரும் சேர்ந்து மேற்கொள்ளும் தாக்குதல்களும் படுகொலைகளும் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கும் 'சாவை' பரிசாக அளித்துள்ளன என்பது நாம் கண்கூடாக பார்த்து வரும் பாதகச் செயல்கள் ஆகும்.

இலங்கையிலும் அரச பயங்கரவாதிகளான மகிந்தா.கோதாபாய மற்றும் சந்திரிகா போன்றவர்களினாலும் அவர்களின் ஏவல் நாய்களாகவும் காவல் நாய்களாகவும் செயற்படும் பாதுகாப்புக் காடையர்களால் படுகொலை செய்யப்பட்ட 35 தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகள் தொடர்பாக இதுவரையில் எவ்விதமான விசாரணைகளும் நடத்தப்படவில்லை என்பது உலகமே அறிந்த விடயமாகும்.

பொது மக்கள் கூட இவ்வாறு தங்களுக்காக ஊடக தர்மத்தைப் பேணிய அர்ப்பணிப்புள்ள ஊடகவியலாளர்களை நினைப்பது எப்போது என்றால் அவர்கள் அரச படையினரால் கொல்லப்பட்ட நாட்கள் நெருங்குகின்ற போதுதான் என்பதும் கவலைக்குரியதாகவே பார்க்கப்படுகின்றது.
இவ்வாறாக. இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் இலங்கையில்
பகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு உண்டு என்பதை மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயமானது, இன்றைய நாளில் எமது நலனுக்காக ஆட்சியாளர்களை விமர்சனம் செய்த நேர்மையான ஊடகவியலாளர்களை தேடிச் சென்று கொன்று அவர்களில் சிலரின் உடல்களை தீக்கும் இரையாக்கிவிட்டு இன்னும் எங்கள் மத்தியில் உல்லாச வாழ்க்கையை அனுபவித்து வரும் மகிந்தா கோதபாய போன்றவர்களுக்கு தகுந்த தண்டனைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே அந்த ஊடகவியலாளர்களின் அமைப்பின் வேண்டுகோள் ஆகும்.

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஸ்டிக்கப்படும்
நிலையில் கடந்த இருபது வருடங்களாக அவரின் படுகொலைக்கு காரணமான குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று தெரிவித்துள்ள அந்த அமைப்பினர், இலங்கையில் இன்று வரை 43 ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். இதில் 35 தமிழ் ஊடகவியலாளர்களும் 05 சிங்கள ஊடகவியலாளர்களும் 03 முஸ்லீம் ஊடகவியலாளர்களும் அடங்குகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.
மகிந்தா மற்றும் கோதாபாய ஆகியோர் ஆட்சியில் இருந்த காலத்தில் அவர்களின் அரசாங்கங்களில் சிங்கள முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்களைச் சார்ந்த அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கியிருந்தார்கள்.

ஆனாலும், அவ்வாறானவர்கள் தங்கள் சொந்தச் சமூகங்களைச் சார்ந்த நேர்மையான ஊடகவியலாளர்கள் தாங்கள் சார்ந்திருந்த ஆட்சியாளர்களால் கொல்லப்பட்ட போது அது பற்றி 'வாய்திறக்காமால்' இருந்து விட்டு, அவர்கள் வாய்களை மூடியும் கண்களை மறைத்தும் இருந்து கொண்டு தங்களுக்கு அரசாங்கம் வழங்கும் சலுகைகளை மாத்திரம் அனுபவித்துக்கொண்டு இருந்திருக்க வேண்டும்.
ஆனால் மீண்டும் மீண்டும் அநியாயத்திற்கு 'துணை' நின்றவர்கள் மக்களிடம் வாக்கு கேட்டு வந்த வண்ணம் உள்ளார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் இலங்கையில் படுகொலை
செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு உண்டு எனவும் அந்த விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஸ்டிக்கப்படும்
நிலையில் கடந்த இருபது வருடங்களாக அவரின் படுகொலைக்கு காரணமான குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும்.
எனினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கவும். எமக்காக எழுத்துத் தொழிலை வரித்து கொண்ட அந்த 'தியாகி'களின் குடும்பங்களின் வலியைப் போக்கவும் மக்கள் போராட்டங்கள் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் இவ்வாரக் கதிரோட்டத்தின் மூலம் ஒரு வேண்டுகோளாக முன் வைக்கின்றோம்.!

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com




**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

**Condo Apartment for Rent**

கொண்டோ அப்பார்ட்மண்ட் வாடகைக்கு **Kennedy/Ellesmere** சந்திப்புக்கு அருகில் உள்ள **Condo** அப்பார்ட்மண்ட் **3 Rooms, 1 Wash Room** அடங்கலாக அனைத்து வசதிகளோடும் வாடைக்கு உடனடியாக வழங்கப்படும். இன்டர் நெற் மற்றும் தொலைக்காட்சி இணைப்பு ஆகியன இலவசம். **1 Parking** உண்டு. பஸ் வசதி மற்றும் தமிழர்கள் கடைகள் சுப்பர் மார்க்கட் ஆகியன மிக அருகில். கென்னடி புகையிரத நிலையத்திற்கும் விரைவாக செல்ல முடியும்.
**விபரங்களுக்கு :**
416-757-0034 / 416-994-3861




# மன்னார் பேசாலையில் வாள் வெட்டு – ஒருவர் வைத்திய சாலையில் அனுமதி

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

- எஸ்.ஆர். லெம்பேட் (25-05-2024)

மன்னார் - பேசாலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முருகன் கோவிலடி 7ஆம் வட்டார பகுதியில் இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்த சம்பவமானது கடந்த 22ம் திகதி புதன்கிழமை இரவு 9 மணியளவில் நடை பெற்றுள்ளது.

வாள்வெட்டு சம்பவத்தில் காயமடைந்தவர் அதே ஊரை சேர்ந்த 38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை என தெரிய வருகிறது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கடந்த 23 ஆம் திகதி பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனினும் வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை என பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர்.

மேலும் அன்றை தினம் வாள் கத்தி இரும்பு கம்பிகளுடன் 15க்கும் மேற்பட்ட நபர்கள் வந்ததாகவும் வந்தவர்கள் கடும் போதையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் தொடர்ச்சியாக இவ்வாறான சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸார் இவர்களுக்கு உரிய நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்த வேண்டும் என கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

குறித்த பகுதி மக்கள் வாள்வெட்டு நபர்களுக்கு எதிராக கையெழுத்திட்டு உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# வைத்தியர்கள் பட்டப்படிப்பை முடித்த பின்பு குறைந்தது மூன்று வருடமாவது தமது மாகாணத்தில் சேவையாற்ற வேண்டும்

## - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை!



வைத்தியர்கள் தமது பட்டப்படிப்பை முடித்த பின்பு குறைந்தது மூன்று வருடமாவது தமது மாகாணத்தில் சேவையாற்ற வேண்டுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்த அடுத்துவரும் அமைச்சரவையில் பத்திரமொன்றை சமர்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பெண்கள் மருத்துவம் மற்றும் பராமரிப்புக்கான சிறப்பு நிலையத்தின் திறப்பு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அமைச்சர், நெதர்லாந்து அரசாங்கத்தின் இலங்கைக்கான இலகுகடன் உதவியாக ரூபா 50320 மில்லியன் ரூபாய் செலவில் இந்த நிலையமானது கச்சிதமாக அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பெண்கள் மற்றும் கற்பவகளுக்கான அவசர சிகிச்சை பிரிவு, அதிதீவிர சிகிச்சை பிரிவு, குழந்தைகளுக்கான விசேட சிகிச்சை பிரிவு, சத்திர சிகிச்சை கூடங்கள் இரண்டு, கற்பவதிகளுக்கான விடுதிகள் இரண்டு, பெண் நோய்கள் விடுதி, தொற்றுநீக்கம் பிரிவு, செயற்கை கருத்தரிப்பு இரசாயன கூடம், கதிரியக்கவியல் பிரிவு என இந்த வைத்திய நிலையம் அமையப்பெற்றுள்ளது.

அத்துடன் சூரிய மின்சக்தி வசதி மற்றும் மின் பிறப்பாக்கி வசதிகள் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இது கிளிநொச்சி வாழ் மக்களுக்கு மாத்திரமல்லாது வடக்கு மாகாண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று நான் நம்புகின்றேன்.

இதேவேளை நேற்றையதினம் ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கான மருத்துவ பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிக்கான தொகுதி ஒன்று திறக்கப்பட்டது. அதுவும் பல வசதிகளை கொண்டதாக இருக்கின்றது.

அங்கு ஒரு கோரிக்கை அவரிடம் விடுக்கப்பட்டது. யாழ் போதனா வைத்திய சாலையை தேசிய வைத்தியசாலை ஆக்குமாறு.

ஆனால் அதற்கு முன்பே ஜனாதிபதி என்னோடு அருகில் இருந்த உரையடிக்கொண்டிருக்கும்போது அந்த விடயத்தை கூறி அடுத்துவரும் அமைச்சரவையில் என்னை அதற்கான பொறிமுறைகளை முன்னெடுக்குமாறு கேட்டு இருக்கின்றார்.

அந்த வகையில் அதை நான் முன்னெடுக்கவிருக்கின்றேன்.

அத்துடன் அப்படியான எண்ணம் அவருக்கு இருந்தமையை இட்டு அவருக்கு நான் எமது மக்களுடைய சார்பில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருந்த பொழுது தமிழ் மக்கள் அன்றே அவருக்கு அந்த வாய்ப்பை கொடுத்திருந்தால் இன்று தமிழ் மக்களின் வாழ்வியல் சிறப்பானதாக அமைந்திருக்கும். ஆனால் அன்று தவறவிட்டுவிட்டோம்.

ஏனென்றால் தமிழ் மக்களது வாக்குகள் ஊடாகத்தான் ஜனாதிபதி ஒருவர் வெல்லக்கூடிய வாய்ப்பு 2005 இருந்தது.

அன்று அந்த வாய்ப்பை ரணில் விக்ரமசிங்கவுக்கு கொடுக்கப்பட்டிருந்தால் இந்த பாழாப் போன யுத்தமோ அல்லது இத்தனை துன்பங்களை துயரங்களை இடம்பெருவுகளை எமது மக்கள் சந்தித்து இருக்க மாட்டார்கள்.

அதே நேரம் எமது மக்களுக்கு தற்போதும் ஜனாதிபதி தேர்தல் என்ற வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

அந்த வாய்ப்பை பயன்படுத்தி நாங்கள் இன்றைய ஜனாதிபதியுடன் சேர்ந்து பயணிப்பதன் ஊடாக நாடும் எங்களுடைய மக்களும் அதிக பயன்களை பெறலாம்.

இதேநேரம் நான் அடிக்கடி கூறி வருவதுபோன்று இந்த நாடு பொருளாதார ரீதியாக அதல பாதாளத்தில் விழுந்து கொண்டிருந்த பொழுது தென்னிலங்கை தலைவர்கள் பலரிடம் நாட்டை பொறுப்பெடுக்குமாறு கோரிக்கை விடுத்த பொழுது அவர்கள் எவரும் அதை பொறுப்பெடுக்க முன்வந்திருக்கவில்லை ஆனால் ஜனாதிபதி ரணில் அதை பொறுப்பெடுக்க முன்வந்தார்.

நான் அவருக்கு சொல்வதுண்டு நீங்கள் ஒரு பிஸ்ரலோடு வந்து இன்று மல்டிபரில் ஆற்றலோடு இருக்கின்றீர்கள் என்று.

உங்களுக்கு தெரியும் இந்த நாட்டை ஜனாதிபதி பொறுப்பெடுக்கின்ற பொழுது தென் இலங்கையில் அராஜகம் தலைவிரித்தாடி இருந்தது.

அதை தொடர விட்டிருந்தால் அது வடக்கு கிழக்குக்கும் பரவி இருக்கும்.

அதேநேரத்தில் எடுத்ததுக்கெல்லாம் வரிசையில் தான் நின்று பொருட்களை பெறக்கூடிய நிலைமை.

ஆனால் கடந்த இரண்டு வருடதுக்குள் ஜனாதிபதி தன்னுடைய ஆற்றலால் தன்னுடைய செயல்பாட்டால் எங்களுக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றர்.

அதனால் அவருக்கு நாங்கள் இன்னும் ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டும் என்று நான் கோரிக்கை முன்வைக்கின்றேன்.

இதேவேளை எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சுமந்திரன் மற்றும் சித்தார்த்தன் ஆகியோரும் ஜனாதிபதி அவர்களுடைய செயல்பாட்டை பாராட்டி இருக்கின்றார்கள்.

அந்த வகையில் எதிர்வரும் காலங்களிலும் அந்த சந்தர்ப்பத்தை ரணில் விக்ரமசிங்கவுக்கு கொடுப்பதன் ஊடாகவும் அவரோடு சேர்ந்து பயணிப்பதற்கு ஊடாகவும் எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளில் இருந்து வெளியில் வரலாம் என்று நினைக்கின்றேன்.

மேலும் அரசியல் உரிமைப் பிரச்சினை தொடர்பில் நீண்ட காலமாக என்னுடைய கருத்துக்களை நான் பதிந்து வந்திருக்கின்றேன்.

ரசில் உரிமை பிரச்சினை என்பது நான் நீண்ட காலமாக சொல்லி வந்த இலங்கை இந்தியா ஒப்பந்தத்தில் இருந்து ஆரம்பிப்பது சிறந்த ஒரு ஆரம்பமாக இருக்க முடியும் என்று.

னால் துரதிஸ்டவசமாக தமிழர் தரப்பு விட்ட தவறுகளால் என்ன நடந்தது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இதேநேரம் நேற்று திறந்துவைக்கப்பட்ட யாழ் மருத்துவபீட கட்டடம், இன்று திறந்துவைக்கப்பட்ட கிளிநொச்சி வைத்தியசாலை உள்ளிட்ட ஏனைய வைத்தியசாலைகளில் பல்வேறு பற்றாக்குறைகள் ஆளணி பற்றாக்குறைகள் இருக்கின்றன.

அவற்றையும் நிவர்த்தி செய்யுமாறு ஜனாதிபதியினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கின்றேன். நான் மாத்திரம் இல்லை சக நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது தொடர்பில் ஜனாதிபதியிடம் கொண்டுசென்றிருக்கின்றனர்.

அதனடிப்பயில் அதற்கும் ஜனாதிபதி நிச்சயம் தீர்வு தருவார் என்று நம்புகின்றேன்.

அதோடு இந்தியாவோடும் ஒரு நெருக்கமான நில தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு அற்புதமான கொள்கையை ஜனாதிபதி முன் வைத்திருக்கின்றார்.

அதனால் அவரோடு சேர்ந்து பயணிப்பதற்கு ஊடாக நாம் விரைவில் கடந்த காலங்களிலிருந்து எமது வரலாற்றை மாற்றியமைக்கக்கூடியதாக இருக்கும்.

இதேநேரம் தமிழ் பிரதிநிதிகள் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவார்கள் பின்பு தேர்தல் வந்த உடனே அரசாங்கம் தங்களை ஏமாற்றி போட்டது என்று சொல்வதுண்டு. ஆனால் என்ன பொறுத்த வகையில் நான் அப்படி சொல்லப் போவதில்லை. இதை நான் அரசாங்கத்தோடு பேசி இணக்கப்பாட்டை ஏற்படுத்தி நிச்சயம் பெற்று தருவேன்.

இறுதியாக தமிழ் மொழியில் படிக்கின்ற வைத்திய மாணவர்களுக்கு நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அவர்கள் படிக்கின்ற பொழுது உணர்ச்சிவசமான கருத்துக்களையும் கொள்கைகளை முன் வைப்பார்கள். படித்து முடிந்த பின்னர் பட்டதாரிகள் ஆகின்ற பொழுது அவர்களில் பெரும்பான்மையானவர்கள் தென்னிலங்கை சென்று தங்களது மேல் கல்வியை தொடர வேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்கின்றார்கள்.

ஆனபடியினால் தயவுசெய்து நீங்கள் உங்களுடைய பட்டப்படிப்பை முடித்த பின்பு குறைந்தது மூன்று வருடமாவது இந்த மாகாணத்தில் சேவையாற்றும் வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்பதாக நெதர்லாந்து அரசின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் சிகிச்சை பராமரிப்பு பிரிவுக்கான கட்டடத் தொகுதியை ஜனதிபதி ரணில் விக்ரமசிங்க திறந்துவைத்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரசன்னத்துடன் 5320 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த கட்டடத்தொகுதி இன்று முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதியால் சம்பிரதச்யபூர்வமாக திறந்துவைக்கப்படு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கிளிநொச்சி சென்றிருந்த ஜனாதிபதி மற்றொரு நிகழ்வாக உறுமய உரித்து வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி இலவச காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரசன்னத்துடன் 25-05-2024 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

யுத்தம் நிறைவுக்கு வந்தபின்னர் வடக்கு மாகாணத்தில் காணி உரிமம் மற்றும் அது தொடர்பில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன் வாழ்ந்துவரும் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை காணவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வந்த கடும் முயற்சிகளுக்கு தற்போது ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டுள்ள உரிமம் திட்டத்தின் ஊடாக தீர்வு கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் இன்றையதினம் கிளிநொச்சி மாவட்டத்தில் 1000 பயனாளிகளுக்கு காணி உரிமங்கள் வழங்கிவைக்கப்படமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாள்மற்றும் கணக்காளாரின் திருகுதாளம் – உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

பு. கஜிந்தன்



முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு உற்பட்ட சம்பத்நுகர பாடசாலை அபிவிருத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வழங்காமல் கால இழுத்தடிப்பு சொய்யப்பட்டமை வெளிவந்துள்ளது.

குறித்த பாடசாலையின் அபிவிருத்திக்காக சுமார் 485 740.57 பெறுமதியான நிதியினை விடுவிக்குமாறு மாகாண கல்வி பணிப்பாளரினால் கடந்த வருடம் ஐப்பசி மாதம் கடிதம் அனுப்பப்பட்டது.

எனினும் முல்லைத்தீவு வலயக் கல்வி பணிப்பாளரான தமிழ்மாறன் மற்றும் கணக்காளரான திவ்ய ரூபன் ஆகியோர் குறித்த பாடசாலைக்கான நிதியை வழங்காது காலம் தாழ்த்தி வந்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் மாகாண கல்வி பணிப்பாளர் ஜோன் குயின்டர்ஸ் உள்ளதீவு வலயக் கல்வி பணிப்பாளரிடம் குறித்த நிதி வழங்கமை தொடர்பில் விளக்கம் கேட்டு எழுதும் மூலம் கடிதம் அனுப்பி உள்ளார்.

முல்லைத்தீவு வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கணக்காளர் தொடர்பில் ஏற்கனவே பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வட்டுக்கோட்டை இந்துவின் முத்துக்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டி!



முதல் தடவையாக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாண-வர் சங்கத்தினால் பி.பி.எல் என்ற பெயரிலான கிரிக்கெட் தொடர் 23-05-2024 ஆரம்பித்து வைக்கப்பட்டது.

23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் இந்த போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன. இதில் பாடசாலை சார்பாகவும் ஒரு அணி பங்குபற்றியதுடன், பழைய மாணவர்களின் 20 அணிகள் பங்குபற்றின. 24ஆம் திகதியான 2010 மற்றும் 2014ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு அணிகளுக்கு இடையே இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் 2014 அணி வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இந்த போட்டியில் 2014 ஆண்டு அடியை சேர்ந்த ரி.சரவணன் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், 2010 அணியை சேர்ந்த எஸ்.டுசியந்தன் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவரும் வட்டுக்கோட்டை, இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமான ப.தர்மகுமாரன் பிரதம அதிதியாக பங்குபற்றியதுடன், கல்லூரியின் அதிபர் திரு.லங்கா பிரதீபன், பழைய மாணவர் சங்கத்தினர், போட்டியாளர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.







இலங்கை செய்திகள் Sri Lanka News

# பேரம் பேசும் ஏமாற்று அரசியல் வேண்டாம் – திடசித்தத்துடன் முன்நகர்வோம்!

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பு

இலங்கைக்கான அரச தலைவரைத் (ஜனாதிபதி) தேர்வு செய்யும் தேர்தல் தொடர்பான பேச்சுக்கள் முனைப்புப் பெற்றுள்ள நிலையில், கட்டமைக்கப்பட்ட இனவழிப்புப் பொறிமுறைகளிற்குள் (Structural Genocide) சிக்குண்டு இனவிடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழ் மக்கள் தமது அரசியல் விடுதலைப் பயணத்தில் இத்தேர்தல் களத்தினை தங்கள் நலன்சார்ந்து எவ்வாறானதாகக் கையாள வேண்டும் என்பதில் கடந்த கால அனுபவங்களைப் பரிசீலனை செய்து இனியாவது சுதாகரித்து முன்நகர வேண்டிய அவசியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தற்போதைய தமிழர் அரசியல் நிலவரம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2009 இற்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் சாணக்கியம், ராஜதந்திரம் என்னும் பெயரில் வெற்று வாக்குறுதிகளை மாத்திரமே நம்பி தமிழ்த் தரப்புக்களால் முன்னெடுக்கப்படும் பேரம் பேசும் இணக்க அரசியலினால் தமிழினவழிப்பிலிருந்து தாயகத்தின் ஒரு அங்குல நிலத்தையேனும் காப்பாற்ற முடியவில்லை என்பதோடு, தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய அரசியற்கட்சிகளும் உதிரிகளாக்கப்பட்டுள்ளமையும் அது உளவியல்ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மனநிலையினை மக்களிடையே விதைப்பதிலுமே வெற்றியடைந்துள்ளது.

ஈழத்தமிழ் மக்களை அரசியற்படுத்தி அணிதிரட்டுதல்.

போரிற்குப் பின் மக்களிடையே உள்ள தோல்வி மனோநிலையினை அகற்றுதல்.

வடக்கு - கிழக்கிற்கான பொருளாதாரக் கட்டமைப்பை நிறுவுதல்.

அரசற்ற தரப்பாக பன்னாடுகளைக் கையாள்வதற்கான வெளிவிவகாரக் கொள்கை மற்றும் கட்டமைப்பை உருவாக்குதல்.

பன்னாட்டுச் சமூகத்தில் கூட்டாகத் தமிழரின் குரலை முன்வைத்தல்.

வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பினை தடுத்துநிறுத்துதல்.

அதிகாரப்பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற சிறிலங்கா ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட 13ஆம் திருத்தத்திற்கு அப்பால் தமிழ் அரசியலை நகர்த்துதல்.

ஓர் அரசற்ற தரப்பாக எமது தமிழ்ச் சமூகத்தினால் அடைந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட விடயங்களெதனையும் சாதித்திராத தமிழ் அரசியற் தரப்புக்கள் தொடர்ந்தும் பேரம் பேசும் அரசியலால் இனியும் எதையாவது சாதிக்கும் என்பதில் நம்பிக்கையில்லை. தமிழ் அரசியற்கட்சிகளும், குடிமக்கள் சமூகத்தினரும் (Civil Societies) தமிழ் மக்களின் பின்நோக்கிய இந்நிலையிலாவது தம்மைச் சுதாகரித்துக் கொண்டு தமிழ் அரசியலின் பாதையினை மீளச் சரிவர தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

கடந்த 2010, 2015, 2019 ஆண்டுகளில் நடைபெற்ற சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தல்களில் இனப்படுகொலைப் பொறுப்பாளிகளான ஒரு தரப்பினரை எதிர்ப்பதாகக் கூறி, இனப்படுகொலைக் குற்றத்தைப் புரிந்த சிறிலங்காவின் இராணுவத் தளபதி, பதில் பாதுகாப்பு அமைச்சர், போர்க்குற்றம் புரிந்த பெருமளவான இராணுவத்தினரின் ஆதரவினைப் பெற்ற நபர்களுக்கே வாக்களிப்பதற்குப் பரிகார நீதி கோரக்கூடிய தமிழ் மக்கள் தவறாக வழிநடாத்தப்பட்டோம்.

இனியாவது ஏமாற்று கபட அரசியலிற்குப் பலியாகாமல், தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ, வெளித்தரப்புக்களுக்கோ சென்றுசேர்வதைத் தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களை தமிழ் அரசியற் தரப்புக்கள் மேற்கொள்ளத் தவறுமேயானால் நாம் அரசியல் பிழைத்த மக்களாக்களாக்கப்படுவோம்.

சமகால அரசியற் களச்சூழலில் தமிழ் மக்களின் முன்னால் உள்ள தெரிவுகள், சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல்.

சிறிலங்காவின் அரச தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் தற்போது எதிர்பார்க்கப்படும் தேர்தலை நிராகரித்து, அத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான அறைகூவல் விடுக்கும் பொதுவாக்கெடுப்பாகக் கைளாளும் வகையில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துதல்.

சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல் மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துதல் இரண்டும் ஒரே கருத்தியலின் இருவேறுபட்ட பிரயோக வடிவங்களே! தமிழர்களால் அளிக்கப்படாத வாக்குகள் மற்றும் பொதுவேட்பாளருக்கு வழங்கப்படும் வாக்குகள் என இரண்டுமே சிங்கள - பௌத்த பெருந்தேசியவாதத்தின் முகவர்களை நிராகரிக்கும் வாக்குகளேயாகும்.

பொதுவேட்பாளர் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பின்வரும் விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த தமிழ் மக்கள் உள்ளிட்ட தொடர்புபட்ட தரப்புக்கள் அனைவரையும் வலியுறுத்துகின்றோம்.

சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணிப்பதனாலோ, தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதனாலோ சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர் எவர் வென்றுவிடக் கூடும் எனும் கேள்வி பொதுவில் அனைவரிடமும் எழக்கூடியதொன்று. ஆனால், அரசியல் விடுதலை வேண்டும் சமூகமாக எமக்கு எது தேவை? எமது நிலைப்பாடு என்ன? என்பதுவே நாம் அக்கறை கொள்ளவேண்டியது. அதன் பக்க விளைவுகளைப் பற்றியல்ல.

பொதுவேட்பாளரை நிறுத்துதல் என்பது எதிர்வரும் சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைத் தமிழ் மக்களின் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தேர்தல் ஒன்றாக மாற்றுவதேயாகும். ஆகவே, பொதுவேட்பாளர் எனும் எண்ணக்கரு நடைமுறையில் வெற்றி - தோல்விகளுக்கு அப்பாற்பட்டதாகும்.

பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் இதுவரைகால வேணவாக்களை பிரதிபலிக்க வேண்டுமேயன்றி, குறிப்பிட்ட சில தரப்புக்களின் அரசியல் நலன்களையல்ல.

பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் குறியீடாக நிறுத்தப்பட வேண்டும். முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை அடையாளப்படுத்தும் வகையில் கிழக்கிலிருந்து வேட்பாளர் தேர்வு நடைபெற வேண்டும். அவ்வேட்பாளர் பெண்ணொருவாராக இருப்பின் உத்தமம்.

தமிழ்மக்களின் வாக்குகள் என்பது அவர்தம் வேணவாக்களைச் உறுதிபடச் சொல்வதற்கேயன்றி பேரங்கள் பேசுவதற்கல்ல. ஆகவே இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் என்ற பேச்சுக்களுக்கே இடமளித்தல் கூடாது.

பொதுவேட்பாளராக நிறுத்தப்படும் நபர் அரசியல்வாதியல்லாதவராக இருப்பதோடு, தேர்தலின் பின்னர் அந்நபர் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து செயற்படுவதோ, தேர்தல் அரசியலில் ஈடுபடுவதோ தவிர்க்கப்பட வேண்டும் என்பது முன்நிபந்தனையாக்கப்பட வேண்டும்.




மேற்படி விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மக்களின் வாக்குகள் இத்தேர்தலிலாவது அவர்களின் உரிமைக்குரலாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். மேற்கண்ட தெரிவுகளில் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் உள்ளிட்ட அனைவரும் இணைந்து கூட்டாகத் தீர்மானமொன்றினை மேற்கொள்ளும் பட்சத்தில், தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதற்கும் இணைந்து பயணிப்பதற்குமான எமது உடன்பாட்டினை மாணவர் சமூகமாக நாம் வெளிப்படுத்துகின்றோம்.

தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுடனான பேரம் பேசலுக்காகப் பலியாக்கப்படாது. தமிழ்மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, தமிழ் அரசியற்கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் ஒன்றுபட்டுத் தீர்க்கமான முடிவொன்றினைத் திடசித்தத்துடன் மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்தி நிற்கின்றோம்.

நன்றி,

ஊடக மற்றும் வெகுசன தொடர்புப் பிரிவு,
பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

---

# உன்னால் முடியும்

*முடியாது என்பது மூடத்தனம்*
*முடியும் என்பதே மூலதனம்*
*முடிவு வருவது நிச்சயம்*
*மடியும் வரையும் போராடு*
*அடிமேல் அடியை அடித்தால்*
*அம்மியும் நகரும் அன்றோ*
*அடிகளை நீயும் அளந்தால்*
*அடைவாய் இலக்கை அருகிலே!*

*நடக்காது அவநம் பிக்கை*
*நடக்கும் தன்னம் பிக்கை*
*கடக்க சிரமமென கருதாதே*
*கடந்து காட்டிப் பேரெடு*
*இடக்கு முடக்காய் இயம்புவார்*
*எதையும் காதில் வாங்காதே*
*மடக்கச் சிலபேர் முயலுவார்*
*மலைபோல் நிமிர்ந்து தடுப்பாயே!*

*உந்தன் எதிரி உலைவு*
*உடனே அவனை விரட்டிவிடு*
*பந்த நண்பன் பயிற்சியே!*
*பரிவுடன் அணைத்து வைத்திடு*
*எந்த இடரு வருகினும்*
*எடுத்த கருமம் விடாதே!*
*அந்தகன் அருகில் வந்தாலும்*
*அவனையும் எதிர்க்கத் தயங்காதே!*

*வெற்றியைத் தேடி விரையாதே!*
*வலிந்து வாசல் வந்திடும்*
*மற்றவர் உன்னை மடக்கலாம்*
*மனதைத் தளர விடாதே!*
*சுற்றுத் தயங்கி நின்றால்*
*தளர்ச்சி உன்னைத் தடுத்திடும்*
*கற்றவர் உன்னைக் கவனிப்பர்*
*கலங்காக் காலடி வைப்பாயே!*

*(அந்தகன் – இயமன் உலைவு – ஊக்கமின்மை)*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் பொதுவேட்பாளர் முன்னெடுப்புக்கு யாழ்ப்பாணம் வணிகர் கழகமும் ஆதரவு

தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான மக்கள், சமூக அமைப்புகளுடனான உரையாடலின் ஒரு கட்டமாக திங்கட்கிழமை 27.05.2024 மாலை யாழ்ப்பாணம் வணிகர் கழகத்துடனான சந்திப்பு நடைபெற்றது.

பொதுவேட்பாளர் விடயத்தில் தொடர்ச்சியான செயற்பாட்டில் இருக்கும் சமூக (சிவில்) அமைப்புகளின் கூட்டிணைவு சார்பாக கலந்துகொண்ட பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம், சட்டத்தரணி சி.அ. யோதிலிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கும் யாழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் செயலாளர் உட்பட்ட முக்கிய உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் யாழ் வர்த்தக சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான நோக்கம் அதன் முக்கியத்துவம் தொடர்பாக விரிவாக பேசப்பட்டிருக்கிறது.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே பொதுவேட்பாளரின் அவசியத்தை முன்னிறுத்தி அது விரைவாகவும் வீரியமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டை வர்த்தக சங்கத்தினர் முன் வைத்திருக்கின்றனர். இது பொதுவேட்பாளர் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியிலும் சமூக நிறுவனங்கள் மத்தியிலும் தன்னியல்பாக தோன்றியுள்ளமையின் வெளிப்பாடு என சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும் இச்சந்திப்பில் பொதுவேட்பாளர் முன்னெடுப்பில் தொடர்ச்சியாக




இயங்கிவரும் சிவில் சமூக அமைப்புகளின் கூட்டிணைவில் யாழ் வர்த்தக சங்கமும் இணைந்து செயற்படுவதை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இது தொடர்பான தமது அறிக்கையை முன்வைப்பதாகவும் ஊடகங்கள் ஊடாக தமது உடன்பாட்டையும் இதன் அவசியத்தையும் வெளிப்படுத்தி தொடர்ந்து இக்கோரிக்கையை வலுப்படுத்துவதில் பங்காற்றுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தின் முக்கியத்துவம் கருதி வேறு பல சமூக நலன் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் செயற்படும் அமைப்புகளும் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும் என கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களை, இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் (Eric Walsh), கனடாவின் சர்வதேச அபிவிருத்திகளுக்கான பிரதி அமைச்சர் கிறிஸ்டோபர் மக்லணன் (Christopher MacLennan) உள்ளிட்ட குழுவினர் (29-05-2024) அன்று சந்தித்து கலந்துரையாடினார்கள். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

நல்லிணக்கச் செயற்பாடுகள், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல், காணிவிடுவிப்பு, கல்வித்துறை மேம்பாடு, தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.



கல்வி முறையில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்த கௌரவ ஆளுநர், அதற்கான மாதிரி செயற்பாடுகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார். மேன்மை தங்கிய ஜனாதிபதி கடந்த வாரம் வடக்கிற்கு விஜயம் செய்தபோது, வைத்தியசாலைகளுக்கான புதிய பிரிவுகளை திறந்துவைத்ததுடன், பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களையும், மக்களுக்கான காணி உறுதிகளையும் வழங்கி வைத்தார். இதனூடாக வடக்கு மாகாண மக்களுக்கு சிறந்த கல்வி மற்றும் சுகாதார சேவை மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் தெரிவித்தார்.

காணி உறுதிகளை வழங்கியமையால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கும், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் அதிக நன்மைகள் கிட்டும் என தெரிவித்த கௌரவ ஆளுநர் தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளும், கடன் வசதிகளும் தேவைப்படுவதாக கூறினார்.

இந்த விடயங்களை கேட்டறிந்த கனேடிய தூதுக்குழுவினர் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுக்க தாம் தயாராக உள்ளதாக தெரிவித்தனர்.

THANA INSURANCE Inc.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்




Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# தேசத்தைத் திரட்ட வேண்டிய தமிழ்ப் பொது வேட்பாளர்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



கடந்த வாரம் ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்ட அவர் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் வீட்டுக்கும் சென்றார். அது விக்னேஸ்வரனுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதைதான், அதேசமயம் சந்திப்பின்போது அவர் சுட்டிக்காட்டிய முக்கியமான விடயங்களில் ஒன்று, தமிழ்ப் பொது வேட்பாளர் பற்றியதாகும். ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தக்கூடிய அளவுக்கு தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்படுமா என்று அவர் விக்னேஸ்வரனிடம் கேட்டிருக்கின்றார்.

அணில் அந்தக் கேள்வியை விக்னேஸ்வரனிடம் கேட்டது தற்செயலானது அல்ல. அதுவும் வீடு தேடிப் போய்க் கேட்டது தற்செயலானது அல்ல. விக்னேஸ்வரன் ஏற்கனவே பொது வேட்பாளர் தொடர்பாகப் பேசி வருகின்றார். அவ்வாறு பொது வேட்பாளராக நிற்பதற்குத் தான் தயார் என்றும் அவர் அறிவித்திருந்தார். பொது வேட்பாளராக நிற்கப் போகின்றவர் சிங்களம் தெரிந்தவராக இருப்பது நல்லது என்றும் அவர் பேசியிருக்கிறார். அவர் சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் நியாயங்களை எடுத்துகூற வேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பு. ஆனால் அவ்வாறு ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்குத் தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்பட்டு ஒரு முடிவை எடுக்காது என்று ரணில் விக்கிரமசிங்க விக்னேஸ்வரனிடம் கூறியிருக்கிறார். ஏன் அவர் அப்படிக் கூறினார்? ஏனெனில் அந்த முயற்சியை முன்னெடுத்துவரும் அரசியல்வாதிகளில் ஒருவராகிய விக்னேஸ்வரன் அதைத் தனக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு மேலும் தீவிரமாக அதில் ஈடுபடலாம் என்று உள்நோக்கம் ரணிலிடமிருந்து இருக்கலாம்.

ஏனெனில், ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் முன்நிறுத்தப்பட்டால், அவர் பெருமளவுக்கு சஜித் பிரேமதாசாவுக்கு சேரக்கூடிய வாக்குகளை பறித்து விடுவார் என்ற எதிர்பார்ப்பு பொதுவாக உண்டு. ஏனெனில் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசாவை ஆதரிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. பொதுவாக தமிழரசுக் கட்சி யுஎன்பிக்குச் சாய்வானது. அடுத்த காரணம், ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது ராஜபக்சக்களின் தயவில் தங்கியிருப்பவர். கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் ராஜபக்சங்களுக்கு எதிராக ஒன்றுபட்டு நின்றார்கள். இந்த முறையும் அவர்கள் அவ்வாறு ஒன்றுபட்டு நின்றால் தமிழ் வாக்குகள் ரணிலுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் குறைவு. படித்த ஆங்கிலம் பேசும் உயர்வர்க்கம் ரணிலுக்கு வாக்களிக்கக்கூடும். பொருளாதாரம் நெருக்கடியில் இருந்து அவர் நாட்டை மீட்டெடுத்து இருக்கிறார் என்ற அபிப்பிராயம் தமிழ், சிங்கள, முஸ்லிம் உயர் வர்க்கத்தினர் மத்தியில் உண்டு.

எனவே அந்த வாக்குகள் தனக்கு கிடைக்கும் என்று ரணில் நம்புகின்றார். விக்னேஸ்வரனும் அந்த உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்தான். இந்த அடிப்படையில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டால் அவர் சஜித் பிரேமதாசாவுக்குத்தான் பாதகமாக இருப்பார். அவர் சஜித்தின் வெற்றியை கேள்விக்கு உள்ளாக்குவார். இப்பொழுது கிடைக்கும் ஆகப்பிந்திய புள்ளிவிபரங்களின்படி ஜனாதிபதித் தேர்தலில் சஜித் அதிகம் வெல்லக்கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருக்கிறார். அவருக்கு அடுத்தபடியாக அனுர. மூன்றாவதாகத்தான் ரணில் காணப்படுகிறார். ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் தேர்தல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன் அல்லது சில கிழமைகளுக்கு முன் காட்சி தலைகீழாக மாறுவது உண்டு. ரணில் விக்ரமசிங்க என்ற புத்திசாலி, சந்திரசாலி என்னென்ன தந்திரங்களைச் செய்வார் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். அதிலும் குறிப்பாக அவர் ஆட்சிக்கு வருவதைத் தான் மேற்கத்திய நாடுகள், ஐநா, பன்னாட்டு நாணய நிதியம் போன்றனவும் விரும்புவதாகத் தெரிகிறது.

எனவே விக்னேஸ்வரனே வீடு தேடிச் சென்று ரணிலுக்குக்கூறிய செய்தி என்பது சஜித்தை தோற்கடிக்கும் நோக்கிலானது என்றும் எடுத்துக் கொள்ளலாம். ரணில் அதை எந்தத் தந்திர நோக்கத்தோடும் கூறியிருக்கலாம். ஆனால் அதை அவர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அதுதான் உண்மை. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் குடிமக்கள் சமூகங்களுக்கு இடையே காணப்படும் ஐக்கியம் கட்சிகளுக்கு இடையே கிடையாது.

சில விவகாரங்களை மையப்படுத்தி தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கலாம். மற்றும்படி கட்சிகள் கட்சிகளாகவே இருக்கின்றன. அவை தங்களுடைய வாக்கு வங்கியை கட்டி எழுப்புவதில்தான் கவனமாக இருக்கின்றன. கடந்த 15 ஆண்டு கால தமிழ் அரசியலானது அப்படி ஒரு அரசியல் கலாச்சாரத்தில்தான் தடம்பதித்து நிற்கின்றது. அதாவது கட்சிமைய அரசியல். கடந்த 15 ஆண்டுகளாக கட்சிகளின் உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் வாக்கு கேட்கும் பொழுது தங்களுக்கு என்றுதான் வாக்குகளைச் சேகரித்தார்கள். அல்லது ஆகக்கூடியபட்சம் கட்சிக்கென்று வாக்குகளைச் சேகரித்தார்கள் என்றும் சொல்லலாம். ஆனால் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் ஒரு கட்சி வாக்காளரே தனது சக கட்சி வாக்காளருக்கு எதிராக செயல்படும் நிலைமைகளும் அதிகமாகக் காணப்பட்டன.

இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் தனக்கென்று காசு செலவழித்து தனக்கென்று இரவு பகலாக உழைத்து வாக்குத் திரட்டும் ஒரு தேர்தல் மையப் பண்பாட்டில் தேசத்துக்காக வாக்கை திரட்ட எத்தனை அரசியல்வாதிகள் தயார்? ஏனென்றால் தமிழ்ப் பொது வேட்பாளருக்காகத் திரட்டப்படும் வாக்குகள் ஒரு தேசத்துக்கானவை. ஒரு தனி நபருக்கானவை அல்ல. அங்கு ஒரு தனிநபர் வேட்பாளராக நிறுத்தப்படுவார். ஆனால் அவர் எந்த ஒரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்த மாட்டார். எந்த ஒரு சமயத்தையோ அல்லது சாதியையோ அல்லது பிராந்தியத்தையோ அவர் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடாது. அவர் தமிழ்த் தேசிய ஐக்கியத்தின் குறியீடாக நிப்பார். அவர் ஒரு பிரமுகராகக்கூட இருக்கவேண்டும் என்று இல்லை. அவர் தமிழ் மக்களின் ஐக்கியத்தைப் பிரதிபலிப்பார். அல்லது தமிழ் மக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஓர் அடையாளம். அவ்வளவுதான்.

அவ்வாறு தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர் அந்தத் தேர்தல்மூலம் தனக்குக் கிடைக்கும் பிரபல்யத்தையும் பலத்தையும் எதிர்காலத்தில் கட்சித் தேவைகளுக்காகப் பயன்படுத்தக் கூடாது என்ற ஒரு உடன்படிக்கை அவரோடு எழுதப்பட வேண்டும் என்று சிவில் சமூகங்கள் எதிர்பார்க்கின்றன. எனவே ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படக்கூடிய ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் எனப்படுகின்றவர், தனக்காக வாக்குக் கேட்கப் போவதில்லை. ஒரு கட்சிக்காக வாக்குக் கேட்கப் போகவில்லை. தமிழ் ஐக்கியத்திற்காகத்தான் வாக்குக் கேட்பார். தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்காகத்தான் வாக்குக்குக் கேட்பார். இன்னும் அழுத்தமாகச் சொன்னால் தமிழ்த்தேசிய ஐக்கியத்துக்காக அவர் வாக்குகளைத் திரட்டுவார்.

இது கடந்த 15 ஆண்டுகளாகப் பெரிய அளவில் காணப்படாத ஒரு போக்கு. ஒரு தனி நபருக்காக, தனி அரசியல்வாதிக்காக, தனி நாடாளுமன்ற உறுப்பினருக்காக, அல்லது மாகாணசபை உள்ளூராட்சிசபை உறுப்பினருக்காக, வாக்குத் திரட்டும் ஒரு பண்பாட்டில் இருந்து இது முற்றிலும் மாறானது. தேசத்துக்காக வாக்குத் திரட்டுவது. அப்படியென்றால், இங்கு செலவழிக்கப்படும் காசு தை செலவழித்தவருக்குத் திரும்பி வராது. ஒவ்வொரு தேர்தலின்போதும் அரசியல்வாதிகள் காசைச் செலவழிக்கும் பொழுது, அந்தக் காசு எப்படித் தங்களுக்கு லாபமாக வரும் என்றுதான் சிந்திப்பார்கள். அதை ஒரு முதலீடாகத்தான் அவர்கள் பார்ப்பார்கள். அது ஒரு தனிநபர் தனக்காக முதலீடு செய்யும் காசு. தனக்காக முதலீடு செய்யும் உழைப்பு.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளருக்காகத் திரட்டப்படும் வாக்குகள் அத்தகையவை அல்ல அவை தேசத்துக்காகத் திரட்டப்படும் வாக்குகள். எனவே தன் சொந்தக் காசைச் செலவழித்து, அர்ப்பணித்து, இரவு பகலாக உழைத்து ஒரு பொது வேட்பாளரை வெற்றி பெறச்செய்ய வேண்டும். அவர் தேர்தலில் வெற்றி பெற மாட்டார். அவர் ஜனாதிபதியாகவும் வர மாட்டார். ஆனால் அவர் இரண்டு விடயங்களைச் செய்வார். ஒன்று, பிரதான தென்னிலங்கை வேட்பாளர்களின் வெற்றியை சவால்களுக்கு உட்படுத்துவார். அதைவிட முக்கியமாக, அவர் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவார். தமிழ் மக்கள் ஒரு தேசமாகத்திரண்டு விட்டார்கள் என்ற செய்தியை தமிழ் மக்களுக்கும் உலகத்துக்கும் அவர் உணர்த்துவார்.

அவ்வாறு தேசத்துக்காக வாக்குத்திரட்டும் ஒரு தேர்தல் மையப் பண்பாடு என்பது, தமிழ் அரசியலில் கடந்த 15 ஆண்டுகளாக மிகக்குறைந்த அளவே மிகப் பலவினமான ஒரு போக்காகவே காணப்பட்டது. ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவு அதனை ஒரு பொதுப் போக்காகவும் பலமான போக்காகவும் மற்றும் நோக்கத்தைக் கொண்டது. இந்த விடயத்தில் கட்சிகள் தமது கட்சி நலன்களைக் கடந்து, தனிநபர் ஆதாயங்களை கடந்து, ஒரு தேசத்துக்காக ஒன்றுதிரளவும் உழைக்கவும் வேண்டியிருக்கும். ஒரு தேசத்துக்காகத் தங்கள் சொந்தக் காசைச் செலவழிக்கவும் தியாகம் செய்யவும் அர்ப்பணிப்புகளுக்கு தயாராகவும் இருக்கவேண்டும். அவர்கள் அப்படித் தயாராக இருந்தால், சிவில் சமூகங்களின் வேலை இலகுவாகிவிடும், சிவில் சமூகங்கள் திட்டமிடுவதுபோல கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பை வெற்றிகரமாக உருவாக்கலாம். அந்த பொதுக் கட்டமைப்பு, கட்டமைப்புரீதியாக ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே ரணில் விக்னேஸ்வரனிடம் முன்வைத்த சவால் என்பது அவருடைய தனிப்பட்ட வெற்றி இலக்கை நோக்கமாகக் கொண்டது. தன் எதிரியைத் தோற்கடிக்கும் தந்திரங்கள் மிகுந்தது. ஆனால் தமிழ் மக்கள் அதனை எதிர்கொள்ளும்போது அது யாரையும் தோற்கடிப்பது அல்லது யாரையும் வெற்றி பெற வைப்பது அல்லது யாரோடும் பேரம் பேசுவது என்ற நோக்கங்களைக் கொண்டதாக இருக்கக்கூடாது. மாறாக தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது; சிதறிக் கிடக்கும் தமிழ் மக்களை ஓரணியில் திரட்டுவது என்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இதுவரையிலும் தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப். தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆகிய கட்சிகள்தான் பொது வேட்பாளர் என்ற சிவில் சமூகங்களின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன. ஏனைய கட்சிகளும் கூட்டுக்களும் இனிமேல்தான் தங்களுடைய நிலைப்பாட்டை வெளிப்படையாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கக்கூடும்.

ஆனால் அதற்காக அதிக காலம் எடுத்தால், அது தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற பொது நிலைப்பாட்டைக் கட்டியெழுப்புவதைச் சவால்களுக்கு உள்ளாக்கும். ஏனென்றால் தேசத் திரட்சியைப் பாதுகாப்பது என்பது எப்பொழுது தொடங்கப்பட்டிருக்க வேண்டும்.



# Are You "Shameless"? Tamil Mothers Ask Their Politicians

**- Siva Parameswaran**

War-affected Tamil mothers have strongly opposed Tamil politicians sharing the stage with President Ranil Wickremasinghe when he visited the Northern province recently.

Tamil mothers searching for their kith and kin who were handed over to the Sri Lankan Army during and after the end of the war have alleged that Tamil politicians who have turned a blind eye towards their search for over a decade and a half, have now come forward to support Ranil Wickremasinghe in his Presidential campaign.

Tamil mothers protested in front of the Vavuniya secretariat while the President had discussions with the officials inside. They also protested against the police violence while distributing 'Mullivaikkaal Kanji (gruel) in memory of those Tamils who died during the war.

Protestors under the leadership of Sivananthan Jenita, Vavuniya District President of the Association for the Relatives of the Enforced Disappearances in the North and East (ARED) waved black flags as part of their protest.

"The AERD has been roaming like street dogs searching for their relatives since 2009. Those who support the development plans of the state are abetting their support for the killers. Hence, this president is enacting his dubious drama with an eye on the next Presidential election. A President who came to power without the people's mandate is now trying to secure that mandate. Our politicians and ministers are supporting him".

ARED in the North and East Provinces is a civil society group created to search for the tens of thousands of people who disappeared during Sri Lanka's armed conflict. Led by women their continued peaceful protest continues in its 8th year non-stop irrespective of the harsh summer and pouring monsoon.

President Ranil Wickremesinghe was in the Northern Province on the 25,25 and 26th of May to discuss development plans in the province according to the government post.

Before the arrival of the President, the members of the ARED expressed their reservations about holding talks with the Head of the state citing the failure of the state to render justice for their loved ones who were handed over and surrendered to the Sri Lankan Military during the final phase of the war.

Vavuniya district president of the ARED Sivananthan Jenita strongly criticized the pro-government Tamil politicians calling them "those hanging around for the bones thrown by the government".

"For the sake of their lavish life, these politicians are joining hands with the President without taking notice of the misery of the Tamil people and have closed their eyes to the oppression against the Tamils. We are being subjugated and jailed and are unable to protest on the streets demanding justice. Those politicians who don't question these are Tamils themselves".

Meanwhile, the Tamil National People's Front (TNPF) led by Jaffna district parliamentarian Gajendrakumar Ponnambalam has appealed to the Tamil people in the North and East to boycott the ensuing Presidential election alleging the Head of the State is functioning only for the majority community in the country.

TNPF says the Tamil people will never surrender their rights even under the fear of oppression and the only way to prove it is to boycott the Presidential election.

One Country –Two laws

Sivanathan Jenita also questioned the duplicity of the Sri Lankan state regarding the distribution of the 'Mullivaikal Kanji' and the distribution of alms during the Buddhist festival of Vesak. She said while the 'Kanji' was served to the Tamil people who were starving in the final days of the war due to heavy shelling and air attacks and a barrage of artilleries the alms distributed during Vesak were not so. However, the crackdown on Tamils distributing 'Kanji' as a symbolic act recalling the misery during the final phase of the war was an act of oppression.

"When we were preparing the 'Mullivaikkal Kanji the state agencies stopped it and kicked it citing health and sanitation reasons. But during the Vesak holidays, food including ice creams was distributed in the Police stations, roadside, and other places and no health or sanitation restrictions apply to them. Hence seeing this it is evident that there are two sets of laws in this Country, one for the Tamils and the other for the Sinhalese".

Vavuniya District President of the ARED also questioned the representatives of the Tamil people in the North is it not "shameless" to support the President who says he is not aware of what happened to the kith and kin handed over to the state agencies by the Tamil mothers during the war.

"I am asking these politicians and ministers. Are you shameless? Don't you have self-respect? Are you the people who are going to seek justice for the Tamils? If you people seeking justice think about us who are in the streets. Ask the President what happened to our relatives whom we handed over. Ask him who came here for Pongal. It is to him you are seeking developments and what next".

President Ranil Wickremesinghe was in the Northern Province to participate in various events on the 24, 25, and 26th of May.

Former state minister Vijayakala Maheswaran, Cabinet Minister Douglas Devananda, Parliamentarians Tharmalingam Sitharthan, M.A.Sumanthiran, Charles Nirmalanathan, Kulasingam Thileepan, S.Noharathalingam, Selvam Adaikkalanathan and former chairman of the Northern Province CVK Sivagnanam participated in the meetings with the President according to the President's Media Division.



OM NAMO NARAYANA



125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஓளஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் வரும் காலத்துக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும்

## யாழ் போதனா வைத்தியசாலை அசம்பாவிதம் குறித்து அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்து!

யாழ் போதனா வைத்தியசாலையின் மகிமையையும் ஊழியர்களின் பாதுகாப்பையும் கருதி அடாவடியில் ஈடுபடுபட்ட நபர்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இனிவரும் காலத்தில் இவ்வாறான அச்சுறுத்தல்கள் ஏற்படாத வகையிலான முன்னுதாரணமாக குறித்த நடவடிக்கை இருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

அண்மைக்காலமாக யாழ் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இன்றையதினம் (30.05.2024) ஆராயப்பட்டது.

இதன்போது வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் பொலிசார் ஆகியோரிடம் அது குறித்து விளக்கம் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் கேட்டறிந்தபின் கருத்து கூறுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தியிருந்தார்.

இதன்போது யாழ் வைத்தியசாலை அசம்பாவிதங்கள் குறித்து கருத்துக்கூறிய பணிப்பாளர் சத்தியமூர்த்தி - வைத்தியசாலைக்கு நாளாந்தம் குறைந்தது 5000 அதிகமானவர்கள் அவசர நோயாளர் பிரிவுக்கு பல்வேறு அவசர உயிர் காப்பு தேவை கருதி வருவதுண்டு.



அதுமட்டுமல்லாது இவ்வாறு வருபவர்கள் பலவகையான வாகனங்களில் வருகைதருவதால் உயிர் பாதுகாப்பை கருதி தடையின்றி உள்ளே அனுமதிப்பது வழமை.



அந்த இளக்கமான நடைமுறையை தமக்கு சாதகமாம ஒருசிலர் பயன்படுத்துவதால்தான் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றது.

அதே நேரம் இவ்வாறான சம்பவங்களை வைத்து அவசர நோயாளர் பிரிவு நுழைவாயிலில் இறுக்கமான நடைறையை கொண்டுவரவும் முடியாது.

அந்தவகையில் வைத்தியசாலையின் பாதுகாப்பு அதன் மகிமைகள் குறித்து இளைஞர்கள் அதிக கரிசனை எடுப்பதனூடாகவே இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையை கட்டுப்படுத்தலாம். இதற்கு அனைவரது குறிப்பாக இளைஞர்களது ஒத்துழைப்பும் அவசியம் என்றும் கூறியிருந்தார்.

அத்துடன் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை கடுமையான பிரிவுகளில் சட்டத்தின்முன் நிறுத்தியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இன்நிலையில் வைத்தியசாலையின் பாதுகாப்பில் பொலிசாரின் பங்கு அதிகளவில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ள அமைச்சர் பொதுமக்களும் வைத்தியசாலையின் பாதுகாப்பு மற்றும் நலன்களில் அக்கறை கொள்வது அவசியம்.

இதேநேரம் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதன்மூலம் இனிவருங் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாதவகையில் நடவடிக்கை அமைவதும் அவசியம் என்றும் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடற்படைக்கு காணி சுவீகரிப்பதற்கு எதிர்ப்பு

சுழிபுரம் - சவுக்கடி பகுதியில் கடற்கரைக்கு அருகாமையில் உள்ள தனியாருக்கு சொந்தமான 4 பரப்பு காணிகளை கடற்படையினருக்கு சுவீகரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.








இந்நிலையில் சுவீகரிப்பு பணிகளை கைவிட்டு விட்டு நில அளவை திணைக்களம் அங்கிருந்து சென்றது.

இதில் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், காணியின் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# "டி.எஸ்.ஐ நிறுவனம் கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்ட செருப்புகளை விற்பனையில் இருந்து மீளப்பெறல் வேண்டும்"

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

## தமிழ் மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்தியமைக்காக வருத்தமும் தெரிவிக்கவேண்டும் என்கிறார் பொ. ஐங்கரநேசன் வலியுறுத்து




கார்த்திகைப் பூ வெறும் பூ அல்ல; தமிழ் மக்களின் வாழ்வியலிலும் உணர்வுகளிலும் தமிழ்த் தேசிய அரசியலிலும் இரண்டறக்கலந்துள்ள அவர்களின் உயிர்ப்பூ. இது தென்னிலங்கை நிறுவனமான டி.எஸ்.ஐ பாதணி உற்பத்தி நிறுவனத்துக்குத் தெரியாததல்ல. ஆனாலும், தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டிப்பார்க்கும் விதத்தில் இந்நிறுவனம் தனது இலேசுரக காற்செருப்புகளில் கார்த்திகைப்பூவைப் பொறித்து விற்பனைக்கு விட்டுள்ளது. இது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. டி.எஸ்.ஐ நிறுவனம் கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்ட காற்செருப்புகளை விற்பனையில் இருந்து மீளப்பெறல்வேண்டும். தமிழ் மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்தியமைக்காக வருத்தமும் தெரிவிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வலியுறுத்தியுள்ளார்.

செவ்வாய்க்கிழமை (28-05-2024) தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் பொ. ஐங்கரநேசன் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் புத்தபெருமானின் உருவத்தை உடலில் பச்சை குத்தியவர்களும், பௌத்த சின்னங்கள் அச்சிட்ட ஆடைகளை அணிந்தவர்களும் பௌத்தத்தை அவமதித்ததாக, பௌத்த மதத்தினரின் மனதைப் புண்படுத்தியதாகக் கூறி காவல் துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கார்த்திகைப்பூவும் புனிதமான ஒன்றாக, அவர்களின் தேசிய அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதனால், கார்த்திகைப்பூவைக் காற்செருப்பில் பொறித்திருப்பதைத் தங்களை இழிவுபடுத்தும் ஒன்றாகவே அவர்கள் கருதுகின்றார்கள். தமிழ் மக்களின் மன உணர்வைப் ப்புரிந்துகொண்டு டி.எஸ்.ஐ நிறுவனம் உடனடியாக இக்காற்செருப்புகளைச் சந்தையில் இருந்து மீளப்பெறல்வேண்டும்.



வடக்கில் தமிழ்ப் பாடசாலையொன்றில் விளையாட்டுப் போட்டியின்போது இல்லங்களை அழகுபடுத்துவதற்கெனக் கார்த்திகைப் பூவின் உருவத்தைக் காட்சிப்படுத்தியமைக்காகக் கல்லூரிச் சமூகமே காவல்துறையால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தது. ஆனால், கார்த்திகைப் பூவைப் பொறித்த காற்செருப்புகளின் விற்பனைக்குக் காவல்துறை எவ்வித குந்தகங்களும் செய்யவில்லை. இதுதான் பேரினவாதத்தின் மனோ நிலை. எனவே டி.எஸ்.ஐ நிறுவனம் கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்ட காற்செருப்புகளை விற்பனையில் இருந்து மீளப்பெறும் வரைக்கும், இந்த அநாகரீக இழிசெயலுக்காக தமிழ் மக்களிடம் வருத்தம் தெரிவிக்கும் வரைக்கும், தமிழ் மக்கள் டி.எஸ்.ஐ நிறுவனத்தின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்யாது புறக்கணிக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# வாய்ப்பாட்டு அரங்கேற்ற அழைப்பிதழ்!





இளங்கலைஞர் மன்றத்தின் குருவும் நிறுவனருமான
சங்கீத பூஷணம். இன்னிசை வேந்தர்
**பொன் சுந்தரலிங்கம்** அவர்களின்
மாணவியும் எமது அன்புப் புதல்வியுமாகிய

## லிலானி தங்கவடிவேலு

அவர்களது வாய்ப்பாட்டு அரங்கேற்றம்
எதிர்வரும் 01-06-2024 சனிக்கிழமையன்று
மாலை 4.00 மணிக்கு
1120 Tapscott Road, Unit-3, Scarborough, M1X 1S9
என்னும் விலாசத்தில் அமைந்துள்ள
தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில்
நடைபெறவுள்ளது.

மேற்படி எமது செல்வியின் வாய்ப்பாட்டு அரங்கேற்றத்திற்கு
வருகை தந்து அவரை ஆசிர்வதித்தும்
சிறப்பித்தும் ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்!



இங்ஙனம், பெற்றோர்
திரு.திருமதி. தங்கவடிவேலு தங்கராணி தம்பதி
(416) 736-0563



ஓம் சக்தி துணை
ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்
சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்
585 MIDDLEFIELD RD, UNIT 1&2, TORONTO (MIDDLEFIELD & FINCH) TEL: 416 535-6560
பிரம்மோத்ஸவ (துவஜாரோஹண) விஞ்ஞாபனம்
சிவன் பிரம்மோற்சவ பெருவிழா 2024
சிவன் திருவிழா
(31.05.2024 வெள்ளி முதல் 11.06.2024 செவ்வாய் வரை)
திருவிழா நிகழ்ச்சி நிரல்
31.05.2024 கொடியேற்றம் - வெள்ளி நண்பகல் 11மணிக்கு
06.06.2024 வேட்டை திருவிழா - வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு
07.06.2024 சப்பரத் திருவிழா - வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு
08.06.2024 தேர் திருவிழா - சனிக்கிழமை காலை 11:30
09.06.2024 தீர்த்தத் திருவிழா - ஞாயிறு காலை 11 மணிக்கு
10.06.2024 திருக்கல்யாணம் - பூங்காவனத் திருவிழா திங்கள் இரவு 7:00 மணிக்கு
11.06.2024 வயிரவர் மடை - செவ்வாய் மாலை 7 மணிக்கு
தேர்த்திருவிழா
சனி காலை 11:30 மணி
08.06.2024
என்றும் இறைபணியில்
ஆலய தர்ம கர்த்தா
அனைவரும் வருக – அன்னையின் அருள் பெருக




உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160

டுறம் தமிழ் ஒன்றியம் "Evolving Elder Care In-Home Support"வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல் எனும் ,முதியவர்களுக்கான தன்னார்வ அடிப்படையிலான சேவைகளை வழங்குகிறது.

## இலவச சேவை

- உணவு விநியோகம்,
- தன்னார்லர்கள் மூலம் போக்குவரத்து சேவை: மருத்துவமனை நியமனங்கள், மருத்துவரைபார்வையிடல், மளிகைப்பொருள் கொள்வனவு நிலையங்கள் போன்றவை
- முதியோருக்கான சிறு வீட்டு பராமரிப்பு
- நண்பர்களாக வீட்டுக்கு வருகை தருதல் - நட்பு உரையாடல்கள், மற்றும் திறன் வளர்ப்புஉதவிகள். (Zoom, YouTube, google search...)
- போக்குவரத்து சேவை - வழிபாட்டு தலங்கள், Mall, உணவு விடுதிகள் போன்றவை.

## எங்களின் தொடர்புக்கு

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

- (647) 968-9549
- (647) 286-9549

மேலும் தகவலுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும்:

dtaseniorsinhomesupport.ca

# டுறம் தமிழ் ஒன்றியம்

## வளரும் முதியோர் பராமரிப்பு வீடடில் -ஆதரவளித்தல்



வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

பாதிக்கப்படக் கூடிய மற்றும் குறைந்த வருமானம் உடைய முதியவர்கள்

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவை வழங்கபபடுகின்றது

PICKERING, AJAX,WHITBY, OSHAWA CLARINGTON, BROCK, UXBRIDGE ,SCUGOG,

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

## வளரும் முதியோர் பராமரிப்பு - வீட்டில் ஆதரவளித்தல்

## இலவச உணவு விநியோக சேவை

அசைவம் அல்லது சைவ விருப்பத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

- சூடான, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவு
- எங்களின் தன்னார்வலர்களால் சரியான நேரத்தில் உணவு விநியோகிக்கப்படுகிறது

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவைவழங்கப்படுகின்றது

Pickering, Ajax, Whitby, Oshawa, Clarington,Brock, Uxbridge, Scugog





மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

(647) 968-9549

(647) 286-9549

டெலிவரி தேதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னதாக உங்கள் ஆர்டரைச் செய்யுங்கள்.

தகுதி: பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள்: வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

dtaseniorsinhomesupport.ca

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

## Durham Tamil Association Evolving Elder Care -in Home Support for seniors

### Free Training

- Free Training and a certificate of completion from Computek College in Ajax
- 50 volunteer hours placement

### Benefits

- Free Vulnerable Check
- Unlock valuable life skills with Free Standard CPR and First Aid Training
- Volunteer Travel Expense $0.58/km
- Join us to make a postive impact on seniors lives while gaining valuable skills and exprences.

### Contact US

Office Hours: Monday through Friday 9:00am - 5:00PM

Contact Number:

- (647) 968-9549
- (647) 286-9549

**Durham Tamil Association**

66 Harwood Ave, S.Ajax L1S 2H6




### Serving Eight Municipalities

- Brock
- Uxbridge
- Scugog
- Pickering
- Oshawa
- Clarington
- Ajax
- Whitby

**For More Information Visit the website: dtaseniorsinhomesupport.ca**

## Volunteers Needed!

## தன்னலவாளர்கள் தேவை!




**Join our volunteer team and gain more than just experience – unlock valuable life skills while making a positive impact on seniors' lives in Durham!**

Volunteer Gala : Twice a Year!

- Summer Gala 2024
- Winter Gala 2024
- Spring Gala 2025
- September Gala 2025

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

# முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி

தோற்றம்: 12 - 08 - 1962



மறைவு: 14 - 06 - 2023

## அமரர். ஸ்ரீஸ்கந்தராஜா நாகமுத்து

**திதி: 02-06-2024**

ஓராண்டு கழிகிறது எமக்கே உரித்தான
உத்தமரை இழந்து நகர்ந்த நாட்கள்
நிஜமாகத் தெரியவில்லை.
பாரில் உமைத் தானே உறவென்று
பாசம் வைத்தோம் ஆனால் காலன்
மோசம் செய்தான் நாம் கதறியே வீழ்ந்தோம்

பேரோடு வாழ்ந்தீர்கள் எம் இனியவரே
பெருந்தன்மை மிக்கவரின் முகம்
மலந்திருக்கும் எப்போதும் மற்றவர்கள் மகிழ
ஊர் போற்ற உலாவி வந்தீர் இப்போது
ஓராண்டாய் உமைக் காணா கண்கள் ஏங்குவன
உம் நினைவோடு வாழ்வோம் நிச்சயமாய்!

இங்ஙனம்,
தங்கள் பிரிவால் வாடும் மனைவி நகுலா மற்றும் மகன் கௌஷன்
(416) 930-3258

ARTHIE
MONEY TRANSFER
பணம் அனுப்புவதற்கான
கட்டணம் $5 மட்டுமே
Markham & Steeles Orange Building
108- 3331 Markham Road,
Scarborough, ON M1M 2Z4.
416-754-7474

Door delivery within 25 days from dispatch
Now Open 7 Days a Week
MOSLEY
IMPORT & EXPORT
108-3331 Markham Rd, Scarborough
416 754 7474
Canada to SriLanka
By Ship 50 KG - $80
By Air 23 KG - $260
Markham & Steeles Orange Building

# மரண அறிவித்தல்

## திரு. கந்தையா சுசீலர்

[இளைப்பாறிய வருமான வரி திணைக்கள உயர் அதிகாரி, இலங்கை]



**தோற்றம்: 01-01-1945** **மறைவு: 26-05-2024**

உரும்பிராய் கிழக்கு அரச வீதியில் வாழ்ந்து வந்த கந்தையா சுசீலர் அவர்கள் 26-05-2024 ஞாயிற்றுக்கிழமையன்று உரும்பிராயில் சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா (முன்னாள் ஆசிரியர் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக் கல்லூரி, உரும்பிராய் கிழக்கு) - மகேஸ்வரி தம்பதியின் புதல்வரும்,
சிவசோதி அவர்களின் அன்புக் கணவரும்.
காலஞ் சென்றவர்களான கேதாரகௌரி. தேவகௌரி, யோககௌரி, மற்றும் கதிரைவாசன், தர்மகௌரி, ஆகியோரின் சகோதரரும்.
சிவானி (இங்கிலாந்து) ஜெனனி (அவுஸ்த்திரேலியா) ஆகியோரின் தந்தையும், ஈதன், மாயா ஆகியோரின் பேரனும். டேவிற் (இங்கிலாந்து) அவர்களின் மாமனாரும்,
சஞ்சே, மாதுசன் ஆகியோரின் பெரியப்பாவும், காலஞ்சென்ற ஞானானந்தம் (இணுவில்) அவர்களின் மைத்துனரும். சர்வானந்தன், ஆனந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29-05-2024 அன்று புதன்கிழமை காலை ஈமைக்கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனக்கிரிகைக்காக உரும்பிராய் இளம் காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: கதிரைவாசன் (கனடா) 416 693 2178**
**ரூபிணி (உரும்பிராய் ) 01194 212230875**
**திருமதி சுசீலர் (உரும்பிராய் ) 011 94773263830**



# பாராளுமன்றத்தில் தமிழ் எம்.பி.க்கள் என்ன செய்கின்றார்கள்...?

**"வெறுமனே வந்து பாராளுமன்ற கதிரைகளைச் சூடாக்கிவிட்டு, விவாதங்களில் வீர முழக்கமிட்டு பேசிவிட்டு, சலுகைகளை அனுபவித்து விட்டு சென்றுவிட்டால் மட்டும் போதாது. தமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க பாராளுமன்றத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதற்கு பாராளுமன்றத்தில் எம்.பி.க்களுக்குரிய சிறப்புரிமைகள், ஏற்பாடுகள், வாய்ப்புக்கள் தொடர்பில் மக்களுக்குச் சரிவர இதுவரை தெரியவராததாலேயே இவர்களில் பலரும் மீண்டும் மீண்டும் எம்.பிக்கள் ஆகிக்கொண்டிருக்கிறார்கள்"**

**------------------------------------------------------------ - கே. பாலா**

**நா**ட்டில் ஜனாதிபதித் தேர்தலா அல்லது பாராளுமன்றத் தேர்தலா முதலில் நடக்கும் என்ற வாதப் பிரதிவாதங்கள் நடக்கும் நிலையில் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள ஜனாதிபதி வேட்பாளர்களும் பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள தற்போதைய எம்.பி.க்கள், முன்னாள் எம்.பி.க்கள், தாமும் ஒரு எம்.பி.யாக வேண்டுமென விரும்புவோரும் தயாராகி வரும் நிலையில் பாராளுமன்றத்திற்கு இவர்களை அனுப்பி வைக்கும் வாக்காளர்களான மக்கள் "வாக்கு" எனும் தமது ஆயுதத்தை பயன்படுத்தும் போது பாராளுமன்றம் தொடர்பிலும் அங்கு தம்மால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட எம்.பி.க்கள் தமது மக்களுக்காக செயற்பட்ட விதம் தொடர்பிலும் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம்.

நாட்டில் பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடக்கும் போது தங்களின் கருத்துக்களைத் தேர்தலின் மூலம் பதிவு செய்து, தங்கள் சார்பில் ஒவ்வொரு இன மக்களும் தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்தில் தமது குரலாக ஒலிப்பதற்காக நம்பிக்கையுடன் அனுப்பி வைப்பர். இவ்வாறு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தனிக்கட்சியாகவோ அல்லது மற்ற கட்சிகளுடன் அல்லது அரசுடன் சேர்ந்து தமது மக்களின் நலன்களுக்காக செயற்படவேண்டும். தம்மை மக்கள் ஏன் பாராளுமன்றத்திற்கு அனுப்பினார்கள் என்பதை உணர்ந்தும், தமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கும் மக்கள் தமக்குக் கொடுத்த உயர்நிலை வாழ்க்கைக்கு பிரதி உபகாரமாகவேனும் அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையாவது பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்கு ஊடாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். ஆனால் அவ்வாறானதொரு தமது மக்களுக்கான செயற்பாடுகளை தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களிடையே காண முடியவில்லை.

மக்களால் தமது பிரதி நிதிகளாக பாராளுமன்றம் அனுப்பப்படுவோர் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கான உரிமைகளை, அபிலாஷைகளை, தேவைகளை, தமது மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், நெருக்கடிகளை இப் பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கின்றார்களா? தீர்வுகளை பெற்றுக்கொடுத்திருக்கின்றார்களா என்பது தொடர்பில் மக்கள் கண்டிப்பாக ஆராய, அறிந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

இலங்கைப் பாராளுமன்றத்திலுள்ள 225 எம்.பி.க்களில் 196 எம்.பி.க்கள் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து பொது வாக்கெடுப்பின் மூலமும், மிகுதி 29 எம்.பி.க்கள் தேசிய அளவில் கட்சிகள் பெறும் வாக்கு எண்ணிக்கைக்கேற்ப கட்சிகளின் தேசியப் பட்டியலிருந்தும் தெரிவு செய்யப்படுகின்றனர். தற்போது பாராளுமன்றத்தில் உள்ள 15 சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக அரசியல் கட்சிகளை பிரதி நிதித்துவப்படுத்தி 176 சிங்கள எம்.பி.க்களும் 21 முஸ்லிம் எம்.பி.க்களும் 19 தமிழ் எம்.பி.க்களும் 9 மலையக தமிழ் எம்.பி.க்களுமாக 225 எம்.பி.க்கள் உள்ளனர்.

இந்த நான்கு வகை மக்கள் பிரதிநிதிகளான எம்.பி.க்களில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எம்.பி.க்களே மிகவும் பலவீனமான நிலையிலும் செயற்படாத் தன்மையிலும் தமது சுய தேவைகளை மட்டும் நிறைவேற்றிக்கொள்ளும் குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவர்களாகவும் தமது மக்கள் பற்றிய அக்கறையற்றவர்களாகவும் வெறுமனே உணர்ச்சிகரமான உரைகளை மட்டும் ஆற்றுபவர்களாகவும் உள்ளனர். சரி இவர்கள் எந்த வகையில் தமது மக்கள் தொடர்பில் அக்கறையற்று செயற்படுகின்றனர் என்பதனை பார்ப்போம்.

பாராளுமன்றத்தை பொறுத்தவரையில், எம்.பி.க்களுக்கு பல்வேறு சிறப்புரிமைகள் உள்ளன. தம்மைத் தெரிவு செய்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை, நியாயங்களைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய வசதி வாய்ப்புகள் பல இருக்கின்றன. பாராளுமன்ற அமர்வுகளின் போது மனுக்கள் சமர்ப்பணம் அல்லது வாய்மூல விடைக்கான வினாக்களுக்கான நேரம் அல்லது சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை, தனி உறுப்பினர் பிரேரணை அல்லது 27/2 இன் அடிப்படையில் முன்வைக்கப்படும் விசேட கூற்று அல்லது பிரதமரிடத்திலான நேரடிக் கேள்வி நேரம் என தமது மக்களின் பிரச்சினைகளை சபையின் கவனத்திற்கு கொண்டுவர பல வாய்ப்புகள் உள்ளன.

தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் எதிர்நோக்கும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளுக்கு பாராளுமன்ற உறுப்பினராக உள்ள ஒருவர் பாராளுமன்றத்திற்கு அவ்வாறான நிர்வாக ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நபர் தொடர்பான மனுக்களைச் சமர்ப்பிக்க முடியும். அது காணிப் பிரச்சினை, நஷ்டஈட்டுப் பிரச்சினை, ஓய்வூதியப் பிரச்சினை. இடமாற்றப்பிரச்சினை, பதவி உயர்வுப்பிரச்சினை, அரசியல் பழிவாங்கல் பிரச்சினை என எதுவாகவும் இருக்க முடியும். அவ்வாறு மனுவைச் சமர்ப்பிக்கும் போது அந்த மனு பரிசீலனைக்காக பொது மனுக்கள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வுகள் அல்லது அதற்கான பதில்கள் அதனுடன் தொடர்புபட்ட அமைச்சரினால் பெற்றுக் கொடுக்கப்படும்.

அதேபோன்று, வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது பிரதமர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களிடம் தமது மக்களின் பிரச்சினை அல்லது தமது பிரதேசத்தின் பிரச்சினை அல்லது தமது மாவட்ட, மாகாணத்தின் பிரச்சினை அல்லது ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் ஒரு எம்.பி.பாராளுமன்றம் கூடும் நாட்களில் ஒரு நாளில் இரண்டு வினாக்களை எழுப்ப முடியும். இந்த இரண்டு வினாக்களிலும் துணை வினாக்களாக தலா இரு வினாக்களை எழுப்ப முடியும். இவ்வாறான வினாக்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சரோ இராஜாங்க அமைச்சரோ பிரதி அமைச்சரோ கண்டிப்பாகப் பதில் வழங்க வேண்டும். சில வேளைகளில் கால அவகாசம் கோரினாலும் அக்கேள்விக்கு அவர்கள் பதிலளித்தே ஆகவேண்டும். பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட கேள்வியாக இருந்தால் மட்டும் சில வேளைகளில் பதில் வழங்கப்படமாட்டாது.

இதேபோன்றுதான் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை. பாராளுமன்ற சபை அமர்வு மீண்டும் அடுத்து வருகின்ற ஒரு திகதிக்கு சபை ஒத்திவைக்கப்படும் போது கொண்டு வரப்படுவதே சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை. இது பொது முக்கியத்துவம் வாய்ந்த, அவசரம் கருதிய விடயம் ஒன்றின் மீது குறுகிய அறிவித்தலில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் கொண்டுவர முடியும். இதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் அல்லது தீர்வு வழங்க வேண்டும்.

தனிநபர் பிரேரணையும் இதுபோன்ற ஒன்றுதான். இப் பிரேரணையும் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு அதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் பதிலும் தீர்வுகளும் வழங்கப்படும். இவற்றைவிட கட்சித் தலைவர் ஒருவரினால் 27/2 இன் அடிப்படையில் முன்வைக்கப்படும் விஷேட கூற்று மிகமுக்கியமானது. பொதுமக்களின், நாட்டின் முக்கியம் கருதிய விடயங்கள் தொடர்பில் சபையில் கவனத்திற்குக் கொண்டுவந்து அது தொடர்பான பதிலையும், தீர்வையும் இதன்மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் இவ்வாறான எந்தவொரு சிறப்புரிமைகளையும், வாய்ப்புகளையும் தமிழ் எம்.பி.க்கள் பயன்படுத்துவது அரிதிலும் அரிதாகவே உள்ளது. சில வேளைகளில் வாய் மூல விடைக்காண வினாக்களில் இவர்கள் கேள்விகளைக் கேட்டிருந்தாலும் கேள்விக்கான நேரத்தின் போது சபையில் இருப்பதில்லை. தற்போது பாராளுமன்ற அமர்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுவதால் மக்களால் இதனை நன்றாக அவதானிக்க முடியும்.

முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எம்.பி.க்களை பொறுத்த வரையில் அவர்கள் பலமான நிலையிலேயே உள்ளனர். அவர்கள் அமைச்சரவை அமைச்சர்களாகவும், இராஜாங்க அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் இருந்து கொண்டு தமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கின்றனர்.

பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை தமிழ் எம்.பி.க்கள் 19 பேர் இருந்தாலும் இவர்களில் ஒரு அமைச்சரவை அமைச்சரும் [டக்ளஸ் தேவானந்தா] 3 இராஜாங்க அமைச்சர்களும் [வியாழேந்திரன் - சந்திரகாந்தன் - சுரேன் ராகவன்] மட்டுமே உள்ளனர். முஸ்லிம் பிரதிநிதிகள் 21 பேர் உள்ள நிலையில் இவர்களில் ஒருவர் அமைச்சரவை அமைச்சராகவும் ஒருவர் இராஜாங்க அமைச்சராகவும் உள்ளனர். மலையக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் 9 பேர் உள்ள நிலையில் இவர்களில் ஒருவர் அமைச்சரவை அமைச்சராகவும் ஒருவர் இராஜாங்க அமைச்சராகவும் உள்ளனர்.

தமிழ் எம்.பிக்கள் சார்பில் அமைச்சரவை அமைச்சராகவும் இராஜாங்க அமைச்சர்களாகவும் இருப்பவர்கள் தமிழ் தேசியத்துக்கு விரோதமானவர்களாகவும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு உரத்து குரல் கொடுக்க முடியாதவர்களாகவுமே உள்ளனர். இதன் மூலம் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எந்தளவுக்கு பலவீனமான நிலையில் உள்ளனர் என்பதனை தெரிந்து கொள்ள முடியும். இவ்வாறான நிலையில் இருந்தும் எம்.பி.க்கள் என்ற வகையில் தமக்கு கிடைக்கும் மேற்கூறியுள்ள வாய்ப்புகளைக் கூட தமது மக்களுக்காக பயன்படுத்தாத, பயன்படுத்த விரும்பாத அல்லது பயன்படுத்தத் தெரியாத தமிழ் எம்.பி.க்களை என்ன செய்வது?

இனப்பிரச்சினைக்கான தீர்வு, காணாமல் போனோர் பிரச்சினை, இராணுவ ஆக்கிரமிப்பு. காணிப் பிரச்சினை ஆகிய 4 விடயங்கள் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினை என்ற நினைப்பிலேயே பாராளுமன்றத்தில் தமிழ் எம்.பி.க்களின் கண்துடைப்பு செயற்பாடுகள் அமைந்துள்ளன. தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள், வாழ்வாதாரப் பிரச்சினைகள், அன்றாடப் பிரச்சினைகள், தமிழ் இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பின்மைப்பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அவர்கள் அக்கறை காட்டாத நிலையே உள்ளது.

வெறுமனே வந்து பாராளுமன்ற கதிரைகளைச் சூடாக்கிவிட்டு, விவாதங்களில் வீர முழக்கமிட்டு பேசிவிட்டு, சலுகைகளை அனுபவித்து விட்டு சென்றுவிட்டால் மட்டும் போதாது. தமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க பாராளுமன்றத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். பாராளுமன்றத்தில் எம்.பி.க்களுக்குரிய சிறப்புரிமைகள், வசதிவாய்ப்புகள் தொடர்பில் மக்களுக்குச் சரிவர இதுவரை தெரியவராததாலேயே இவர்களில் பலரும் மீண்டும் மீண்டும் எம்.பிக்கள் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். தமது அடிப்படை, வாழ்வாதார பிரச்சினைகளுக்குப் பாராளுமன்றத்தின் ஊடாக இலகுவாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தும், அதுதொடர்பில் தமது பிரதிநிதிகள் அக்கறையின்றி இருப்பது மக்களுக்குத் தெரிய வந்தால், இவர்கள் மீண்டும் எம்.பி.க்களாவது குதிரைக் கொம்பாகவே இருக்கும்.




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பில் சர்ச்சை வெடித்தது

- நடராசா லோகதயாளன்

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கான நிதி ஒதுக்கீடு மறுக்கப்பட்டுள்ள போதும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரில் யாழ்ப்பாணத்திற்கு 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

வியாழக்கிழமை (30) அன்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே இந்த சர்ச்சை வெடித்தது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இவ் விடயம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்தது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு வெகுமதி ஆசனப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமாக 8 பேர் உள்ளனர். இதில் டக்ளஸ் தேவானந்தா, த.சித்தார்த்தன், சி.சிறிதரன் ஆகிய மூவருக்கு மட்டும் நிதி ஒதுக்கீட்டிற்கான அனுமதி ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.வி. விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டிற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இவற்றை சுட்டிக் காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அங்கஜன் இராமநாதன் போன்றோர் இது வேண்டுமென்றே புறக்கணிக்கப்படும் செயல்பாடாக உள்ளது என்று குரல் எழுப்பினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பரிந்துரையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 திட்டங்களிற்கு 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பெயரில் அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி கோரப்பட்ட சமயமே சர்ச்சை ஏற்பட்டபோது. அவ்வாறானால் அத்திட்டங்களை அனுமதிக்க முடியாது என தீர்மானிக்கவா என ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரினார்.

“எமது மாவட்டத்தில் எமது மக்களின் அபிவிருத்திக்காக வந்த பணத்தை திருப்பி விட விரும்பாத காரணத்தினால் அதனை அனுமதிக்கின்றோம். இதே நேரம் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான நீங்கள் கூறிய கால அவகாசத்தில் நாமும் எமது திட்டங்களை மாவட்டச் செயலகத்தில் கையளித்தோம் இருந்தும் எமது திட்டங்கள் மட்டும் அனுமதிக்கப்படவில்லை” என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைகளை சமர்ப்பித்த மறுநாளே அவற்றை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி அதன் பிரதியை உரிய நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும் அனுப்பி வைத்தோம் என மாவட்டத்தின் கடமை நிறைவேற்று அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை புறக்கணித்த அரச உத்தியோகத்தர்கள்



- நடராசா லோகதயாளன்

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்றினைந்து புறக்கணித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வியாழக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த மாவட்டத்திலும் மாகாண சபையின் அலகிலும் பணியாற்றும் சுமார் 25 நிர்வாக சேவை அதிகாரிகள் உள்ளனர். எனினும் அவர்கள் இந்த கூட்டத்தை புறக்கணித்தனர்.

நிர்வாக சேவை அதிகாரிகளின் பணிப் புறக்கணிப்பு காரணமாக இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்ட கடமை நிறைவேற்று அரச அதிபர் ம.பிரதீபன் மற்றும் மாகாண சபையை சேர்ந்த பொ.வாகீசன் ஆகிய இரு அதகாரிகள் மட்டுமே கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஊதிய உயர்வு உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் இந்த நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மருத்துவ கழிவுகள் பிரச்சனை

அரியாலையில் பொதுமக்கள் குடியிருப்புகள் மத்தியில் உள்ளகாணியில் சுகாதாரத்திற்கும் தீங்கு விளைவுக்கும் வகையில் மருத்துவ கழிவுகள் எரியூட்டப்பட்டமை எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளபடவேண்டும் என்றும் இதனை கண்காணிக்க உரிய பொறிமுறை அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் இன்றையதினம் மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் முன்மொழிந்து கோரிக்கை வைத்தார்.

இதன்போது அமைச்சர் வைத்தியசாலை பணிப்பாளரிடமும் இது தொடர்பில் கேள்வி எழுப்பினார் இதற்கு பணிப்பாளர் சம்பவத்திற்கு அடுத்தநாளே கழிவுகள் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பப்பட்டு தற்காலிகமாக அந்த கழிவுகளை பாதுகாப்பாக சேமித்து வைத்துள்ளோம் மற்றும் புதிய எரியூட்டி தெல்லிப்பழையில் உள்ள எரியூட்டிகளில் எரிக்கப்பட்டுவருகின்றன இந்த காணி வைத்தியசாலைகாணி என்பதாலே அங்கு சேமிக கப்பட்டு வந்தது மக்களின் போராட்டத்தை அடுத்து அடுத்தநாளே அகற்றப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் இந்த விடயத்தை நியாயப்படுத்தாமல் கவனமாக பார்க்கவேண்டும் அவதானமாக செயற்பட்டிருக்கலாம் உங்களது காணியாக இருந்தாலும் இவ்வாறு இனிஇடம்பெறாமல் பாருங்கள் என்று தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் இனி படையினருக்கு தனியார் காணிகளை வழங்க அளவீடு இல்லை என தீர்மானம்



- நடராசா லோகதயாளன்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தனியார் காணிகளை படைத் தரப்பிற்கு வழங்குவதற்கு அளவீடு செய்வதில்லை என்ற தீர்மானம் வியாழக்கிழமை (30-05-2024) அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை காலை சுழிபுரம் பகுதியில் கடற்படைக்கு மேலும் சில ஏக்கர் காணிகளை அபகரிக்கும் முயற்சியில் அரச தரப்பு அளவீடுகளை செய்ய முற்பட்ட வேளை அது அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக தடுத்து நிறுத்தப்பட்டது.

இச்சம்பவம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் எதிரொலித்தது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மே மாதம் 30 ஆம் திகதி வியாழக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே படையினருக்கு தனியார் காணிகள் அளவீடு செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றை யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவருமான சிவஞானம் சிறிதரன் முன்மொழிந்தார்.

கடந்த 2011 ஆம் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் காலத்திலிருந்தே தனியார் காணிகளை அளவீடு செய்து அதை படையினருக்கு அளிக்கும் முயற்சிகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. பல சந்தர்ப்பங்களில் அரசியல் கட்சிகளும், தமிழ் மக்களும் ஒன்றிணைந்து அந்த நடவடிக்கையை முறியடித்திருந்தாலும் அது தொடர்ந்துகொண்டே இருந்தது.

அவ்வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுழிபுரம் - திருவடியில் கடற்படையினருக்கு நிலம் சுவீகரிப்பதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் தனியார் காணிகளை அளவீடு செய்ய முயன்றதனால் அங்கு போராட்டம் இடம்பெற்றது.

எனவே இனி வருத் காலத்தில் படையிடருக்காக நிலம் சுவீகரிப்பதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் தனியார் காணிகளை அளவீடு செய்ய முயல்வதனை நிறுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரக்கை விடுத்த சமயம் படையினருக்கு நிலத்தை சுவீகரிக்க அளவீடு செய்து தருமாறு பிரதேச செயலாளர்கள் தமக்கு கடிதம் அனுப்பிவிட்டு அதனை படையினருக்கும் தெரியப்படுத்துகின்றனர். அதனால் படையினர் எமது அலுவலகத்திற்கு வருகை தந்து அளவீடு செய்து தருமாறு கோருவதனாலேயே நாம் செல்கின்றோம். பிரதேச செயலாளர்கள் கடிதம் அனுப்பினால் அதனை நாம் அளவீடு செய்ய வேண்டியது கட்டாயம். எனவே எமக்கு கடிதம் அனுப்ப வேண்டாம் என பிரதேச செயலாளர்களை அறிவுறுத்துங்கள் என நில அளவைத் திணைக்கள அதிகாரி தர்மபாலன் தெரிவித்தார்.

இதன்போது தனியார் காணிகளை படைத் தரப்பிற்கு வழங்குவதற்கு அளவீடு செய்வதில்லை என்று தீர்மானம் ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் முன்மொழிந்தவர் இந்த தீர்மானத்தை அங்கஜன் இராமநாதன் வழிமொழிய தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# Tamils Demand the Withdrawal of Slippers with 'Karthikai Poo' Printed on Them

**Siva Parameswaran**



Images of a flower native to the Tamil areas in the North and East of Sri Lanka printed on slippers have caused huge anguish and anger among the Tamils both locally and globally calling for its withdrawal immediately from the market.

The Karthikai flower or senkanthal flower (commonly known in English as Flame Lilly and Gloriosa Superba botanically) a species commonly found in South Asia has been associated with Tamil language and culture for centuries.

Tamils say it is an affront to them and amounts to insulting their culture and love of nature.

Police in the North too often question the Tamils when the 'Karthikai Poo' is displayed at social or cultural events organized by them.

However, the state police have turned a blind eye as the largest footwear manufacturer in the country is marketing slippers with the picture of the Flame Lilly. Tamil activists say this exposes the duplicity of the Sri Lankan police. While the display of the flower with bright red and yellow colours is stopped from being used in the Tamil areas, the print of the same flower is now being allowed on slippers with no action being taken against it they allege.

"We are deeply disturbed by prints depicting the Karthikai Poo-the national flower of the Tamil nation amounts to humiliating the cultural sentiments of the Tamil people," Sivagnanam Siritharan, leader elect of the Ilangai Tamil Arasu katchi and Jaffna district lawmaker said.

The printing of the flame Lilly picture on slippers has forced Tamils to boycott the products manufactured by the company.

Cutting across party lines Tamil politicians have called for the immediate withdrawal of the slippers with the print of their national flower on it.

Posting a strong comment on the social media platform X Kanagaratnam Sugash attorney and spokesperson of the Tamil People's National Front called for the slippers to be withdrawn from the market.

"We humbly request the manufacturing company to withdraw the slippers with the prints of the 'Karthikai Poo' from the market as it offends the sentiments of the Eelam Tamils".

He further appealed to the Tamils to boycott the company's products if they failed to withdraw the said slippers with the print from the market immediately.

"If they fail to withdraw it, we request our brethren to boycott the products of the company and also the business establishments which sell the products produced by the company" Sugash posted further on the micro-blogging platform.

Ponnuthurai Aingaranesan former minister for agriculture of the Northern Province too expressed his deep dismay about the flower print on a footwear. He called it an affront to Tamil people while speaking to media persons in the Tamil heartland of Jaffna Aingaranesan- environmental activist and founder of the Tamil National Green Movement said such prints on slippers are deeply humiliating and unacceptable.

"For Tamils, the flower is very holy. If the print of such a flower is on the sandal is akin to stamping it by foot which is what they are conveying, so to say anything relating to Tamils and their culture would be humiliated in all possible ways".

International condemnation from Tamils too has come in. France-based Global Tamil Movement says such acts are expressions of racist hatred and have the tacit support of the state and its agencies. The group has questioned if such acts relating to Buddhism would be tolerated in the country.

"Basically why the print of Karthikai Poo in the slippers. Will they dare to print the picture of the Lotus flower which is sacred to the Sinhala people on the slippers? There have been incidents when people have been arrested and detained at airports for wearing costumes with pictures of Lord Buddha. This is a clear double standard of the Sri Lankan state and its agencies" says Vijay Alagesan media spokesperson of the Paris-based movement.

The issue came to the spotlight after the slippers with pictures of the Flame Lilly were spotted at a footwear showroom in Wellawatte a Tamil-dominated residential area in the capital Colombo. Subsequently, pictures of the sandal went viral on social media.

The footwear is manufactured by D Simpson and Sons- a private company whose brand DSI is popular in the country. The company is the largest footwear manufacturer in Sri Lanka and the largest importer of footwear from abroad, with the largest footwear retail chain in the country.

Questioning the rationale of the state security forces the Tamils ask the usage of the flower on solemn occasions be brutally curtailed and banners with it be torn apart, while they remain mute spectators when it is depicted on footwear, which amounts to openly discriminatory in nature and insulting the Tamil nation and its people.

Tamil students were investigated by the state police when they of the Tellipalai Union College in Jaffna decorated their hostels with the flower during their sports day event. Even the teachers and the principal of the school were summoned by the police for displaying the 'Karthikai Poo'.

Police have demolished pandals and torn apart decorations with the Flame Lilly during events when Tamils remember the war dead. Even youngsters who posted a picture of the flower on Facebook were questioned by the police.

"Tamils should understand the psyche of the racist government through their police who brutally act against the Tamil students who use the 'Karthikai Poo' in decorations whilst printing of the flower in a footwear is being permitted" Aingaranesan added further while speaking to reporters.

He too has called upon the Tamils to boycott the products manufactured by the said company.

DSI which has produced the hugely controversial footwear affecting the sentiments of the Tamils is yet to respond to the condemnation and demand for withdrawal of the footwear with the print of the 'Karthikai Poo' from the market.

The Flamed Lilly or 'Karthikai Poo' is also the state flower of the South Indian state of Tamil Nadu.




MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION - CANADA (ESTD 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)

## மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா

### 33வது பொங்கும் பொழுது விழா - June 08, 2024

மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடாத்தும் பொங்கும் பொழுது விழா ஜுன் 08 ஆம் திகதி சனிக்கிழமை, மாலை 5:30 மணி பதாடக்கம் இரவு 11:00 மணி வரை 3840 Finch Avenue East, Scarborough, Toronto வில் அமைந்துள்ள Metropolitan Centre மண்டபத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற உள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினர் உரை, விழா சஞ்சிழக வெளியீடு, திரையிசைப் பாடல்கள், விணை இசை, நடன நிகழ்ச்சிகள், ஆகிய நிகழ்சிகளோடு பழைய மாணவர் கலந்துரையாடுவதற்குரிய சந்தர்பங்களுக்கும் இடம் அளிக்கப்படும்.

இவ்விழாவிற்கு பழைய மாணவர்கள், மாணவிகள் அவர்தம் வாழ்க்கைத் துணைவர்கள், பிள்ளைகள், நண்பர்கள், நலன்விரும்பிகள் யாவரும் சமூகமளித்து சிறப்பிக்குமாறு பழைய மாணவர் சங்க செயற்குழு அங்கத்தினர் அன்புடன் அழைக்கின்றார்கள்.

தொடர்புகட்கு:

| | | |
|---|---|---|
| க. கமல்ராஜ் | செ. பார்த்திபன் | சி. கணேசலிங்கம் |
| தலைவர் | செயலாளர் | சங்க அங்கத்தவர் |
| (416) 821-7870 | (647) 710-9404 | (647) 993-6248 |

மானிப்பாய் இந்துக்கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி பழையமாணவர் சங்கம் - கனடா



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1097

## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் கொழும்பு

**நண்பர்களே!**

**எனது பெயர் கொண்ட முகநூலில் (Facebook) ஒவ்வொரு வாரமும் இந்துமதம் கூறுவதென்ன? மற்றும் தேடல் என்ற தலைப்பில் பல்வேறு விடயங்கள் பற்றி எழுதி வருகின்றேன். வாசித்தறிந்து உங்கள் கருத்துக்களை வெளியிடுங்கள்.**

**நன்றி.**

பொன்தயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பில்!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

செந்நெறி, சிவநெறி, நன்னெறி என்றெல்லாம் உலகத்தவர்களால் பாராட்டப்பெறும் பெருஞ்சிறப்புடையது சைவசமயம். சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகத் திகழும் சிவப்பரம்பொருளின் அளப்பெருஞ் கருணையினால், அழிக்கமுடியாத சமயமாக இன்றுவரை சைவசமயம் நின்றுகாணப்படுகின்றது. உலகத்தோற்றத்தோடு வேதமும், வேதநெறிப்பட்ட சிவநெறியும் தோன்றின என்பது, சைவசமயத்தின் தொன்மையை உணர்த்துகின்றது. சைவசமயத்தின் முழுமதற் கடவுளாகச் சிவன் காணப்படுகின்றார். சைவத்தின் கொள்கை இன்னது என்பதனை சாத்திர, தோத்திரங்கள் எடுத்தியம்பியுள்ளன.

ஆறறிவு படைத்தமனிதன் ஆண்டவனை தேடி நாடுவதே சமயம் என அழைக்கப்படுகின்றது. இறைவனை நோக்கி ஏங்கும் உள்ளப்பண்பு, ஏங்கி நிற்கும் உள்ளத்திற்கு இறைவன் காட்டும் பாலிப்பு இவையே, அனைத்து சமயங்களின் சாரமாகக் காணப்படுகின்றது. ஆண்டவனை அடைய வேண்டும் என்ற தாபம், மக்களின் மனதிலே அமைந்ததொரு அகலாத தாபமாக விளங்குகின்றது. போர், வெள்ளம், மாறாத துன்பம் ஆகியன நேரும்பொழுது இறைவன்மீதுள்ள நாட்டம் மிகுதியாகின்றது.

செல்வம் மிகச் சேர்ந்தால், செல்வத்தை மிகையாக நாடினால் மனிதன் அழிவான் என்பது பேரறிஞர் வாக்கு. செல்வச் சிந்தனையில் இறைநாட்டம் நிலைபெறாது. இன்னல்களும், இடர்களும் தோன்றும்பொழுது ஐம்புல நாட்டத்திற்கு அப்பாற்பட்டு, உயர்ந்தது ஒன்று உண்டு என்ற உணர்வு மக்களிடையே தோன்றுகின்றது. அந்த உணர்வை வளர்பவையாகக் கோயில்கள் காணப்படுகின்றன. கோயில்களிலே அமைந்துள் திருவுருவங்கள், மனித நாட்டத்தை ஒருமைப்படுத்த உதவுகின்றன. கோயிற்சூழலிலே எழுப்பப்படும் ஒலிகள், தெய்வநாட்டத்திற்குள் மனதை ஈடுபடுத்த உதவுகின்றன.

உருவவழிபாடு சைவசமயத்தில் தொன்றுதொட்டு காணப்படுகின்றது. ஆலயங்களை அமைத்து அங்கு திருவுருவங்களை எழுந்தருளச்செய்து, மக்களை தெய்வநாட்டத்தில் ஈடுபடச் செய்து, அதற்கென மரபுகளை சைவசமய சான்றோர்களும், ஆன்றோர்களும் வகுத்துள்ளனர். “ஆலயந்தானும் அரனெனத் தொழுமே” என்றுரைக்கின்றது சிவஞானபோதம். உயிரானது தான் சார்ந்த பொருளைச் சாரும் தன்மை கொண்டது. பிறவிப்பிணியில் அகப்பட்டு அல்லல்படும் உயிர்களின் வினை நீங்கி ஈடேற்றம் அடைய, முன்னோர்கள் ஆலயங்களை அமைத்தனர். ஆலயங்கள் அறச்சாலைகளாக, அறிவை வளர்க்கும் நிலையமாக, மனித குலத்தை மேம்படுத்த வல்லவையாகக் காணப்பட்டன.

தமிழர்களின் ஆன்மீகநெறி, சமூகவாழ்க்கை, கலாச்சாரம், பண்பாடு, நுண்கலைகள் ஆகியவைகளின் மையமாக திருக்கோயில்கள், தொடர்ந்தும் மனித வாழ்க்கையை மேம்படுத்துகின்றன. வரலாற்று அறிவுக்கு எட்டிய காலந்தொட்டே தமிழினம், இறைவனைக் கண்ணுக்கினிய பொருளாகக் கொண்டு, திருக்கோலத் திருமேனி அமைத்து வழிபட்டு வருகின்றது. “ஆலயமாக அமர்ந்திருந்தானே” என்றும், “ஐந்தன் பெருமையே ஆலயமாவது” என்றும் திருக்கோயிலின் பெருமையை,

“நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின், பாடிப்பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே”

என திருமூலர் விளக்கியுள்ளார். ஆலயவழிபாடு உலகியல் சூழலில் ஆழ்ந்து கிடக்கும் உயிர்களைக் கரையேற்றும். மேலும் உயிர்கட்கெல்லாம் தலைவனாகத் திகழும் ஈசுவரன் அமரும் இடமாதலின், ஆலயத்தை ஈச்சரம் என்றும் அழைத்தனர். சான்றாக திருக்கேதீச்சரம், கோணேஸ்வரம், முனீஸ்வரம், தொண்டீச்சரம், நகுலேஸ்வரம், என்பவற்றைக் கொள்ளலாம்.

இவ்வாறான பெருமைகளோடு விளங்கும் சைவசமயம், ஈழத்தின் ஆதிசமயமாக விளங்குகின்றது. திராவிடஇனத்தின் முதன்மைச்சமயமாக சைவசமயம் ஈழத்தில் விளங்கியுள்ளமைக்கு, ஈழமெங்கும் காணப்படும் பஞ்சஈஸ்வரங்களும், ஏனைய சிவாலயங்களும் சான்றாகக் காணப்படுகின்றன. அந்நியரின் வருகையால் ஈழத்திலே காணப்பட்ட கலைச்செல்வங்களும், சிற்பவேலைப்பாடுகளும், பொருட்செல்வங்களும் கொண்ட சிவாலயங்கள் பல அழிக்கப்பட்டபோதிலும், காலத்தாலும், இயற்கை அனர்த்தங்களாலும் அழிக்கமுடியாதநிலையில், பல்வேறு இனத்தவர்களும் சென்று வழிபடும் சிவாலயமாக கொழும்பிலுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னம்பலவாணேசுவரர் கோயில் காணப்படுகின்றது.

கொழும்பு பொன்னம்பலவாணேசுவரர் கோயில், கொழும்பிலுள்ள கொச்சிக்கடைப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கோயில் கருங்கற்களால் அமைக்கப்பட்ட அழகிய சிற்பவேலைப்பாடுகளைக் கொண்ட கோயிலாகக் காணப்படுகின்றது. ஈழத்தில் இவ்வாறான கருங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களைக் காண்பதரிது. தென்னிந்தியாவிலே காணப்படுகின்ற கருங்கற்பொளிந்த சிற்ப வேலைப்பாடுகளைக்கொண்ட கோயிலுக்கு இணையான கோயிலாக, கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் காணப்படுகின்றது. தென்னிந்தியாவிலுள்ள இவ்வாறான கோயில்களை நாடாண்ட மன்னர்களே கட்டியுள்ளனர். ஆனால் இக்கோயில் ஈழத்திலே வாழ்ந்த சைவப்பெரியாரும், தேசாபிமானியுமான, திருவாளர் அருணாசலம் பொன்னம்பலமுதலியார் என்ற பெருந்தகையினால் கி.பி 1856 ஆம் ஆண்டு கொழும்பு மாநகரிலே கட்டப்பட்டது.

கொழும்பிலுள்ள பிரசித்தமான பகுதியாக கொச்சிக்கடை விளங்குகின்றது. இப்பகுதியிலே சக்திதலமான மாரியம்மன் கோயில் மற்றும் அந்தோனியார் கோயில் என்பன காணப்படுகின்றன. 1856 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தற்போதுள்ளது போல மக்கள் நெருக்கம் அக்காலத்தில் காணப்படவில்லை. ஆயினும் இப்பகுதியில் தமிழ்மக்கள் வாழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டு கொழும்பு செட்டியார்தெருவில், திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியார் என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் சிறந்த சிவபக்தராகவும், கொடைத்திறன் கொண்டவராகவும் விளங்கியுள்ளார். கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் 1856 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

*வளரும்...*

# இலங்கையில் கானல் நீரான காணி சீர்திருத்த ஆணைக்குழு




**- நடராசா லோகதயாளன்**

இலங்கையில் காணி சீர்த்திருத்தம் என்பதும் அதற்காக அமைக்கப்பட்ட ஆணக்குழுவும் அதன் நோக்கத்தை எட்டியுள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டதன் நோக்கமே தலைகீழாக மாறுகின்றதா என எழுப்பப்படும் கேள்விக்கு பதிலளிக்கக்கூட யாருமில்லாதது பெரும் கவலையான விடயமாகவுள்ளது.

காணி உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் தனி ஒருவர் 50 ஏக்கர் நிலத்திற்கு மேல் வைத்திருக்க முடியாது என்ற சட்டம் உருவானபோது பெரும் நிலச்சுவாந்தர்கள் தம் வசம் இருந்த மேலதிக நிலத்தை அரசிடம் கையளித்தபோது அந்த நிலங்கள் காணிச் சீர் திருத்த ஆணைக் குழுவின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு 50 ஏக்கரை வைத்துக்கொண்டு மிகுதியை அரசிடம் கையளிக்கப்பட்ட நிலங்களில் அரசு மட்டும் எப்படி 50 ஏக்கருக்கும் அதிகமாக தனியாருக்கு வழங்குவதனை எவ்வாறு எற்றுக்கொள்ள முடியும் எனக் கேள்வி எழுப்பப்படுகின்றது.

நிறுவனங்கள், கொம்பனிகளின் பெயரில் பல நூறு ஏக்கர்களும் தனிப்பட்ட நபர்களிற்கு 60 முதல் 70 ஏக்கரும் வழங்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. தனிப்பட்ட நபர்களிற்கு 70 ஏக்கரை அடையாளம் காண்பித்துவிட்டு அந்த இடம் ஆணைக்குழுவின் அனுமதி இன்றி சிலர் அடாத்தாக பிடித்துள்ளதாக்கூறி தப்பிக்கின்றனர் எனவும் குற்றம் சாட்டப்படுகின்றது.

இதற்கு சிறந்த உதாரணமாக, மன்னார் அடம்பனில் 72 ஏக்கர் நிலத்தை அடாத்தாக பிடித்துள்ளவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முற்பட்ட சமயம் வடக்கு ஆளுநரின் தலையீட்டினால் சட்ட நடவடிக்கை தடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டம் அடம்பன் நெடுவரம்பு பிரதேசத்தில் சாளம்பன் என்னும் பகுதியில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆளுகையில் உள்ள நிலத்தில் 72 ஏக்கர் நிலத்தை தாமோதரம்பிள்ளை யோகராசா என்னும் நகைக் கடை உரிமையாளர் அடாத்தாக பிடித்து வைத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இவ்வாறு அடாத்தாக அந்த காணியை பிடித்து வைத்துள்ள நபரை அங்கிருந்து வெளியேற்ற சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரியினால் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் இந்தாண்டு ஏப்ரல் மாதம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டிற்கு அமைய பொலிஸார் நடவடிக்கை எடுக்க முற்பட்ட சமயம் வடக்கு மாகாண ஆளுநரின் தனிப்பட்ட செயலாளர் ஆணைக்குழுவின் ஆணையாளருடன் கொழும்பில் நேரில் சென்று முறைப்பாட்டை மீளப்பெறுமாறு கூறியுள்ளார்.

இதற்கமைய ஆணைக்குழுவின் ஆணையாளர் முறைப்பாட்டை பதிவு செய்த உத்தியோகத்தரை தொடர்புகொண்டு முறைப்பாட்டை மீளப்பெறுமாறு அறிவுறுத்தியுள்ளார். இதன் மூலம் 72 ஏக்கரை அடாத்தாக பிடித்து வைத்திருக்கும் நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகள் தடுக்கப்படுவதாக விசணம் தெரிவிக்கப்படுகின்றது.

இதே மன்னார் மாவட்டத்தில் வெறும் 112 ஏக்கர் நிலத்தை 20 பேச் விதம் ஆயிரம் குடும்பங்களிற்கு வீடு அமைத்து குடியிருக்க முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் வழங்கினார் என்ற ஒரே காரணத்திற்காக அந்த மக்களிற்கு 20 பேச்சிற்கான உறுதியை வழங்க மறுக்கும் ஆணைக்குழு தனி ஒரு மனிதன் 72 ஏக்கரை அடாத்தாக பிடித்து வைத்திருப்பதனை கண்டும் காணாதது போன்று வாய் மூடி மௌனியாக இருப்பது ஏன் என்று பொதுமக்கள் வினா எழுப்புகின்றனர்.

பிரச்சனை இவ்வளவு தீவிரமாக இருக்கும் போது வடக்கு மாகாண சபை ஆளுநர் ஏன் மௌனமாக இருக்கிறார் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. தனது தனிப்பட்ட செயலாளர் தனக்கே தெரியாமல் ஆணைக்குழுவிடம் பேசினார் என்று கூறி ஆளுநர் தப்பிக்க முயல்கிறார் என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஆனால் இரண்டு அல்லது மூன்று பரப்பு நிலத்தில் குடியிருப்பவனிற்கு மட்டுமே சட்டம் தன் கடமையைச் செய்யும், அரசின் நிலங்களை ஏக்கர் கணக்கில் அபகரிப்பவர்கள் தொடர்பில் வாய்மூடி இருக்கும் என்ற நிலை நாட்டில் உள்ளதா என்ற கவலைகள் மேலோங்கி வருகின்றன.

இந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து காணி சீர்திருத்த ஆணையம் இதுவரை எந்த கருத்துக்களையும் வெளியிடவில்லை.

# இவ்வார ராசிபலன்

**31-05-2024 வெள்ளி தொடக்கம் 06-06-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** பொறுப்போடும், சிறப்போடும் செயல்படும் வாரம். சோதனைகள் நீங்கும். பதவி உயர்வு தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிற்று உபாதைகளும் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி கூடும். தனவரவுகள் பெருகும். முயற்சிகள் பலிதமாகும். செயல்களில் துணிவு கூடும். தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். நல்லச் செய்திகள் நாடி வரும். வினைகள் அகலும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். பெற்றோர்கள் பாராட்டுக் கிட்டும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குடும்ப குழப்பம் அகலும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஆடம்பரப் பொருள் சேரும். மங்களகரமான செய்தி வரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். புகழ் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். கடன் சுமைகள் குறையும். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். வாகன மாற்றம் ஏற்படும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். திருப்திகள் அதிகரிக்கும். சுபச்செய்தி வரும். அனுகூலச் செய்தி வந்து சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொழில் லாபம் உண்டு. ஆண்களின் அதிகாரம் உண்டு. சாதகமான வாய்ப்பு அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: *8,4,3,1*

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P




**ரிஷபம்:** உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும் வாரம். சாதனையான எண்ணம் உதயமாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பொருள் வரவு ஏற்படும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். மனைவியால் நன்மை உண்டு. மற்றவர்களால் தொல்லை உண்டு. பதவி உயர்வு தாமதமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். வாகன மாற்றம் உண்டு. கொடுக்கல், வாங்கலால் திருப்தி தரும். சகோதர ஒற்றுமை பலப்படும். ஆரோக்கியம் அதிகரிக்கும். புத்துணர்வோடு செயல்படுவது நல்லது. தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். சாதனை படைக்கும் காலம். சுப விரயம் கூடும். உடல்பொலிவு கூடும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வந்து சேரும். உண்மைகள் வெளிப்படும். உயர்வுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மனநிம்மதி குறையும். பணியில் பாராட்டு கிடைக்கும். குடும்ப மேன்மை உண்டு. சேமிப்பு அதிகரிக்கும். புதிய சிந்தனை மேலோங்கும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். நலமும் வகையான நன்மையும் பெருகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடம் மாற்றம் ஏற்படும். பெருமைகள் கூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். யோக பலம் கூடும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். பொருளாதார நிலை உயரும். தொட்டக் காரியம் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: *5,4,3,1*


அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**மிதுனம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு உயரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். வறுமைகள் விலகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உற்சாகம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. விரக்திகள் மறையும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். புத்தி சாதுர்யம் பெருகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். உடல்பொலிவு கூடும். கல்வியில் கவனம் தேவை. திட்டமிட்ட செயல் வெற்றிமுகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் திருப்தி தரும். அன்னிய தேசப்பயணம் உண்டு. திருப்புமுனை ஏற்படும். பொருளாதாரம் மேம்படும். குடும்ப வளர்ச்சி கூடும். அணிமணிகள் சேரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு லாபம் தரும். சகோதரியினால் நன்மை உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. விரும்பிய பொருள் கிடைக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பொதுவிஷயங்களில் நாட்டம் ஏற்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச்செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: *9,5,4,1*

அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,S




**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வாரம். பொறுப்புகள் கூடும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சி பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி பெருகும். மருத்துவச் செலவுகள் குறையும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். இல்லத்தில் மகிழ்ச்சி துள்ளி விளையாடும். புதிய நட்பில் கவனம் தேவை. இடமாற்றத்தால் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைத்தூரப் பயணம் ஏற்படும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். மனோ பயம் அகலும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். முத்தான வாய்ப்புக்கள் வரும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் ஒழியும். பிள்ளைகளின் கல்விச் சலுகைகள் அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. சுபவிரயம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: லஷ்மி குபேரர், அதிர்ஷ்ட எண்: *3,9,1,2*

அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,A



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** திருப்பங்கள் நிறைந்த வாரம். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். பணியில் பாராட்டு கிட்டும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். எதிர்கால எண்ணம் ஏற்றம் தரும். கணவன், மனைவி இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படும். வீடு வாங்கும் வாய்ப்பு உள்ளது. வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர். சுபிட்ஷங்கள் பெருகும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மன-அமைதி உண்டாகும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி கிட்டும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். புகழும், பொருளும் பெருகும். கனவுத்தொல்லை உண்டு. கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச்சொத்து சேரும். செயல் திறமை வெளிப்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். புண்ணிய ஸ்தலப் பயணம் ஏற்படும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழித் தொல்லை குறையும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். வீண் வம்பு விலகும். குடும்ப சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். உணவுப்பிரியம் அதிகரிக்கும். பாராட்டுக்கள் பெருகும். பணவரவு தாமதமாகும். புதிய தொழில் வாய்ப்பு அமையும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தன்னம்பிக்கை கூடும். இன்னல்கள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: *8,9,4,6*

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T




**கன்னி:** எண்ணிய காரியம் கைகூடும் வாரம். சிறிய இடையூறு ஏற்படும். பெரிய மனிதர்களின் சந்திப்புக் கிட்டும். பகைவர் பணிந்து நிற்பர். மனைவி உடல்நலம் பாதிக்கும். புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். ஆபரணச் சேர்க்கையுண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மையுண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்யம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் லாபம் உண்டு. காதலில் மோதல் உண்டு. எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் அதிகரிக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. தொழிலில் நிம்மதி பெருகும். வழக்கு வெற்றி தரும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். தந்தையின் நலம் பெருகும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பொருள் வரவு திருப்தி தரும். பித்தளைத் தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். நல்லோர்கள் நட்பு கிட்டும். மன உற்சாகம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அங்காரகன் அதிர்ஷ்ட எண்: *7,9,5,2*

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,H




**துலாம்:** சாதனைகள் நிகழ்த்தும் வாரம். புகழ்ச்சி அதிகரிக்கும். நோய், நொடிகள் அகலும். தங்க நகைகள் சேரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். உடன்பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு கூடும். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். போட்டி, பொறாமைகள் விலகும். தொழில் விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். வேலைப்பளு கூடும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். வழிபாடு மாற்றம் தரும். கல்வியில் ஈடுபாடு கூடும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். குதூகலமான காலம். அற்புத வாய்ப்புக்கள் கிட்டும். பெண்களின் ஆலோசனை மாபெரும் வெற்றியை தரும். ஆடை, அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும். பங்குச்சந்தை லாபம் தரும். காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர அகங்கள் கூடும். முயற்சிகள் பலன் தரும். மங்களச்செய்தி வரும். மருத்துவச் செலவு உண்டு. மாற்று யோசனை பயன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். திருத்தமான முடிவு ஏற்படும். வியாபாரத்தில் தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மையுண்டு. புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பெண்களால் ஆதாயம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: *6,1,7,8*

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,J




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். புதிய எண்ணங்கள் நிறைவேறும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய கடன் பாக்கிகளும் வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பெண்கள் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. மனதில் நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். நீண்ட நாள் பிரச்சனை நிறைவேறும். உறவினர் வகையில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். ஆண்களின் கோரிக்கை நிறைவேறும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. வாழ்வில் வளம் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் உண்டு. உலோகத் தொழில் உயர்வு பெறும். குடும்ப லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். தொல்லைகள் குறையும். கால்நடைகளால் பலன் உண்டு. பழிச்சொல் தேடி வரும். கையிருப்புகள் கரையும். அந்தஸ்து உயரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தேவைகள் அதிகரிக்கும். புத்திரர் வகையில் சந்தோஷம் ஏற்படும். நினைத்தபடி திருமணம் நடக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: *2,9,6,3*

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,F

***(தொடர்ச்சி 22 பக்கம்)***

Canadian Tamil Sankam · Padimurai Tamil Federation · உலகத் தமிழாசிரியர் பேரவை World Tamil Teachers' Organisation · ABC · Historical and Cultural Studies UNIVERSITY OF TORONTO SCARBOROUGH

# 15-ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு

## தமிழக அரசின் கல்விக்கான விருது - 2023



தமிழக அரசினால் நடத்தப்படும் அயலகத்தமிழர்களின் மாநாடானது தைமாதம் 11, 12 ஆம் திகதிகளில் சென்னையிலில் நடைபெற்றது. அவ்வேளையில், 2023 ஆம் ஆண்டின் கல்விக்கான தமிழக அரசின் விருது படிமுறைத்தமிழ் ஒன்றியத்தின் தலைவரான அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த திரு. முருகேசு பரமநாதன் அவர்களுக்குத் தமிழக முதல்வர் திரு. மு. க. ஸ்ராலின் அவர்களால் வழங்கிச் சிறப்பிக்கப் பட்டது. படிமுறைத்தமிழ் ஒன்றியம் என்பது, படிமுறைத்தமிழ் எனும் கற்பித்தல் முறையைப் பின்பற்றி உலகெங்கும் தமிழ்மொழியைக் கற்பிக்கும் பாடசாலைகளின் கூட்டமைப்பாகும். இக்கற்பித்தல் முறையின் நிறுவனர் கனடாவைச் சேர்ந்த சித்தம் அழகியான் சு. இராசரத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது. உடன் இருப்போர் திரு. லோகன்கணபதி MPP, செல்வம்அடைக்கலநாதன் MP, அமைச்சர் செஞ்சி மஸ்த்தான், ஆளுனர் செந்தில் தொண்டமான்

- உலகின் பல நாடுகளிலும் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களின் சங்கமம்.
- அவுஸ்ரேலியா, மலேசியா, பிசி, சிங்கப்பூர், தமிழ்நாடு, மொரிசியஸ், தென்ஆபிரிக்கா, கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின்... ஆசிரியர்கள் பங்குபற்றும் ஆய்வரங்கம்.

**தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

**இடம் – ரொராண்டோ பல்கலைக் கழகம், ஸ்காபுரோ வளாகம்**

1265 Military Trail, Toronto, ON

காலம் - 2024 யூன் 1, 2, 3

நேரம் - 9 AM முதல் 9 PM வரை

மேலதிக விபரங்களை அறிய

wtcc@padimuraitamil.com padimuraitamil.com 416-821-5773 | 416-843-9514

Tasty தமிழா ™

# தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...



பனை வெல்லம்



தேன் நெல்லி



மரச்செக்கு எண்ணெய்கள்



சுக்கு மல்லி காபி தூள்



யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

*Tasty* தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

*MAHAANS PICK & PRESS OIL MILL INC*
*Organic Bulk Store & Water Filling Station*
*5635 Finch Ave East,*
*Unit 5, Scarborough M1B 5K9.*

Call: 416 293 4010

MAHAANS PICK & PRESS OIL MILL INC

# "தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளின் பிள்ளைகளின் உயர்கல்வியைத் தொடரும் வகையில் கட்டுப்பாடுகள் சிலவற்றை தளர்த்தி அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்குங்கள்"

## உதயன் விருது விழாவில் சிறப்பு விருந்தினராக வருகை தந்தை கனடாவிற்கான துணைத்தூதுவரிடம் கோரிக்கை

(ரொறன்ரோவிலிருந்து செய்தியாளர் அதிசயா)



"இலங்கையிலிருந்து இராணுவக் கெடுபிடிகளிலிருந்து உயிர் தப்புவதற்காக இந்தியா சென்று அங்கு தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக வாழும் எமது ஈழத்தமிழ் சொல்லொனா துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள். எனினும் அவர்கள் தங்கள் குடும்பத்தை கவனமாகக் கவனித்து தங்கள் பிள்ளைகளுக்கும் கல்வி அறிவூட்டும் வகையில் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். இந்த பெற்றோர்களான அகதிகளின் பிள்ளைகள் அங்கு பரீட்சைசகளில் அதிக புள்ளிகளைப் பெற்றும் பல்கலைக் கழகங்கள் அல்லது கல்லூரிகளில் உயர் கல்வியைப் பெறமுடியாமல் அவர்களது அகதிகள் என்ற அந்தஸ்த்து தடுத்துவருகின்றது. மேற்படி திறமை வாய்ந்த பிள்ளைகளின் உயர்கல்வியைத் தொடரும் வகையில் பல கட்டுப்பாடுகள் உள்ளன. எனவே மேற்படி கட்டுப்பாடுகள் சிலவற்றை தளர்த்தி எமது உறவுகளின் பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்குவதற்கு தங்களால் ஆன உதவிகளைச் செய்யுங்கள்".

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவில் சிறப்பு விருந்தினராக வருகை தந்தை கனடாவிற்கான இந்தியாவின் துணைத்தூதுவர் கௌரவ சித்தார்த் அவர்களிடம் கோரிக்கை விடுக்கையில் உதயன் பிரதம ஆசிரியரும் உதயன் விருதுகள் அறக்கட்டளையின் தலைவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் வேண்டுகோள்விடுத்தார்.

அங்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்த கனடாவிற்கான இந்தியாவின் துணைத்தூதுவர் கௌரவ சித்தார்த் அவர்கள் "உதயன்" சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் உரையாற்றும் போது இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழர்கள் கனடாவில் தங்கள் இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்காக இயன்றளவு உழைத்து வருகின்றார்கள். அத்துடன் அவர்கள் பல்வேறு துறைகளில் முன்னேற்றத்தை அடைந்துள்ளார்கள்.



அதற்கு மேலாக தமிழ் மொழி சார்ந்த ஊடகங்களின் பங்களிப்பையும் நான் நன்கு அறிவேன். வானொலிகள் மற்றும் அச்சு ஊடகங்கள் தங்கள் பணிகளை சிறப்பாக ஆற்றிவருகின்றன. குறிப்பாக கனடா உதயன் பத்திரிகை மற்றும் அதன் இணையத்தளம் ஆகியவை தொடர்பாக எமது தூதுவராலயத்தில் பணியாற்றும் பலர் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்கள் என்று புகழாரம் சூட்டினார்.

அதன் பின்னர் அவருக்கு நன்றி தெரிவித்து உரையாற்றியபோதே உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மேற்கண்டவாறு "தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக வாழும் எமது ஈழத்தமிழ் சொல்லொனா துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள். அவர்கள்பிள்ளைகள் அங்கு பரீட்சைசகளில் அதிக புள்ளிகளைப் பெற்றும் பல்கலைக் கழகங்கள் அல்லது கல்லூரிகளில் உயர் கல்வியைப் பெறமுடியாமல் அவர்களது அகதிகள் என்ற அந்தஸ்த்து தடுத்துவருகின்றது" என்று தெரிவித்தார். அதற்கு பதிலளிக்கையிலும் துணைத்தூதுவர் சாதகமான கருத்துக்களைத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Head-aches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5


## இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)





**தனுசு:** எதிரிகளால் ஏற்றம் அதிகரிக்கும் வாரம். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். காதல் எண்ணம் உருவாகும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் உண்டு. உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். வாய்ப்புக்கள் பெருகும். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் மிகுதியாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. பழையக்கடன் வசூலாகும். கல்வியில் மேன்மையுண்டு. சிக்கனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். மாணவர்கள் உற்சாகம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச் செய்திகள் வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். தந்தையின் உடல்நலம் சீராகும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். பெண்களால் மதிப்பும், மரியாதையும் உயரும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**மகரம்:** சாமர்த்தியமாக செயல்படும் வாரம். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வார்த்தைகளில் நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் கிடைக்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். பெண்களின் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பருப்பு தானம் பாவம் போக்கும். ஊக்கம் அதிகரிக்கும். வருமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணங்கள் மேலோங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். உலோகத்தொழில் லாபம் தரும். தாய் உடல்நலனில் அக்கறை தேவை. நிதிப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். குடும்ப மேன்மை உண்டாகும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழிலில் லாபம் அதிகரிக்கும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும் வருமானம் கைகூடி வரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். புதிய வாய்ப்பு வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் செயல்பட வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அக்னி லிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,P




**கும்பம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். பொன், பொருள் சேர்க்கையுண்டு. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். மறைமுகமாக தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். வயிற்றுப்போக்கு வரும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பணவரவு உண்டு. கௌரவம் அதிகரிக்கும். அன்றாட நாட்கள் மனமகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோ'ம் உண்டாகும். மனஅமைதி கிடைக்கும். பங்குச்சந்தைத் தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் களை கட்டும். மனோ தைரியம் அதிகரிக்கும். சுப விரயம் கூடும். நன்மைகள் நாடி வரும். அற்புதமான நாளாக அமையும். குடும்ப கௌரவம் உயரும். பயணத்தால் பலன் உண்டு. சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். சீரான வாழ்வு அமையும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். ஆலய தரிசனம் அமைதியைத் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். பெண்களால் மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். நட்புவட்டம் பெருகும். வராத கடன் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வாழ்வுநிலை உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.

வழிபட வேண்டிய தெய்வம்: கொண்டத்து காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,X




**மீனம்:** திறமைகள் அதிகரிக்கும் வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய் வழி உறவில் நன்மை உண்டாகும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் உண்டு. உறவினரால் நன்மையுண்டு. எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலம் கூடும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். பயணம் வெற்றி தரும். விரயங்கள் அதிகரிக்கும். சொத்துக்களால் லாபம் உண்டு. தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். திடீர் மாற்றம் நன்மை தரும். மங்கள நிகழ்ச்சிகளிலிருந்து பங்குப் பெறுவீர்கள். புதிய தொழில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். விரோதங்கள் விலகும். ஆரோக்கியம் சீராகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

# NESAN
Subramaniam

## 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான
மரக்கறி வகைகள்
மற்றும் பழவகைகளுக்கு
மொன்றியலில்
புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொட்பு கொள்ளவும்.

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1469 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 31, 2024

# கடந்த ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் வெற்றிகரமாக இடம்பெற்ற உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா




18வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் உதயன் சர்வதேச விருது விழாவில் வெளிநாடுகளிலிருந்து விருது பெறுவதற்காக கனடாவிற்கு அழைக்கப்பெற்ற மூவர் மற்றும் கனடா வாழ் வெற்றியாளர்கள் நால்வர் என எழுவர் மேடையில் தனித்தனியாகக் கௌரவிக்கப்பட்ட பின்னர் ஒன்றாக மேடையில் நின்று புகைப்படங்கள் எடுத்துக்கொண்டனர் அவர்களை வாழ்த்தும் வகையில் கனடா ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சுக்களின் பாராளுமன்றச் செயலாளரும் மாகாண உறுப்பினருமான லோகன் கணபதி மற்றும் ஒன்றாரியோ அரசின் போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம் மற்றும் மார்க்கம் நகர சபையின் 7ம் வட்டார உறுப்பினர் யுனைற்றா நாதன் ஆகியோரும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் விருது விழா சிறப்பாக நடைபெற ஆதரவு வழங்கிய வர்த்தகப் பெருமக்களும் மேடைக்கு அழைக்கப்பெற்று அவர்கள் முன்னிலையில் ஏழு விருதாளர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.

உதயன் "தலைமைத்துவ விருது" வழங்கப்பெற்ற சிவஸ்ரீ நா. சோமஸ்கந்தக் குருக்கள் அவர்கள். உதயன் "வர்த்தக மேம்பாட்டு விருது" வழங்கப்பெற்ற வீடு விற்பனை முகவர் ராஜ் நடராஜா அவர்கள். உதயன் " கலை இலக்கிய மேன்மை விருது" வழங்கப்பெற்ற தங்கராசா சிவபாலு அவர்கள். உதயன் " இளையோருக்கான அடையாள விருது" வழங்கப்பெற்ற செல்வி ஸ்ருதி பாலமுரளி அவர்கள். "உதயன் வாழ்நாள் சாதனையாளர் - தமிழ்நாடு விருது" வழங்கப்பெற்ற "தமிப்பணி" ஆசிரியர் வா. மு. சே. திருவள்ளுவர் அவர்கள். உதயன் " சிறப்பு விருது- ஐரோப்பா" என்னும் கௌரவ விருது வழங்கப்பெற்ற பிரான்ஸ் வாழ் ஆர்கேஎஸ். அருள்மொழித்தேவன் அவர்கள் ஆகியோர் மேடையில் பல பிரமுகர்கள் கூடி நிற்க தங்கள் கௌரவங்களைப் பெறுவதைக் காணலாம்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# தமிழகக் கவிஞர் வா.மு. சே. திருவள்ளுவரின் "கவித்தாகம்" "சுற்றமாச் சுற்றும்" ஆகிதய நூல்களின் அறிமுக விழா....



தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் "தமிழ்ப்பணி" சஞ்சிகையின் ஆசிரியர் "தமிழ்மாமணி" வா. மு. சே. திருவள்ளுவர் அவர்களின் கட்டுரைகள் அடங்கிய 'சுற்றமாச் சுற்றும்' உரைநடை நூல் 'கவித்தாகம்' கவிதை நூல்கள் அறிமுக விழா இன்று 31-05-2024 வெள்ளிக்க்கிழமை ஸ்காபுறோவில் நடைபெறவுள்ளது. இடம்- **Center for Youth Empowerment Services: 151, Nashdene Road, Unit:42 Scarborough.** மாலை 7.00 மணி தொடக்கம் 8.30 மணி வரை. "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த அறிமுகவிழா பற்றிய மேலதிக விபரங்களுக்கு:
கணபதி இரவீந்திரன்- 416.898.7824 லோகன்- 416.732.1608



# "இன்னிசை வேந்தர்" அவர்களின் மாணவி லிலானி தங்கவடிவேலுவின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் ஸ்காபுறோவில் மே 1ம் திகதி நடைபெறுகின்றது

"இன்னிசை வேந்தர்" பொன் சுந்தரலிங்கம் அவர்களின் மாணவி லிலானி தங்கவடிவேலு வாய்ப்பாட்டு அரங்கேற்றம மே மாதம் 1ம் திகதி சனிக்கிழமையன்று ஸ்காபுறோவில் தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் மாலை 4.00 மணி தொடக்கம் நடைபெறுகின்றது. அனைவரும் வருக! மேலதிக விபரங்களுக்கு 416 736 0563 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.